9. 87

# யாழ். சமூக அபிவிருத்தி மன்றம்

# 1988 — 1998

# 10வது ஆண்டு விழா மலர்

11 - 10 - 1998

# எம் மன்றதின் இனிய கீதம்

யாழ்சமூக அபிவிருத்தி மன்றம் வாழ்க, வாழ்கவே.
வாழ்வில் மக்கள் அனைவருக்கும் விழுமியங்கள் ஓங்கவே
— யாழ்சமூக

ஞானப்பிரகாசர் இட்டவித்தில் வளர் மரமிது
மானத்தோடு மக்கள் வாழ வழிகள் சொல்லும் வரமிது
ஊனம் ஒன்றும் இல்லையென்று உள்ளம் துள்ளும் உரமிது
வானம் தொட்டு மீள எண்ணும் வலிமை மிக்க கரமிது
— யாழ்சமூக

மாதர் தம்மை ஏற்றத்தோடு வாழவைக்க எண்ணுவோம்
நீதியோடு சுயமுயற்சி நெறிநடந்து உண்ணுவோம்
பேதம் எங்கள் மழலைகட்குப் பிஞ்சினிலே ஊட்டுவோம்
வேதனைகள் கொண்டவர்க்கு வெற்றிப்பாதை காட்டுவோம்
— யாழ்சமூக

தக்கவாறு சமநலத்தில் நாளும் சிந்தை கொள்ளுவோம்
பக்தியோடு பாரின்மீது பாடுபட்டு வெல்லுவோம்
சிக்கனத்தில் சிந்தை வைத்து சேமநிதி பேணுவோம்
இக்கணத்தில் இன்பவாழ்வின் ஆரம்பத்தைக் காணுவோம்
— யாழ்சமூக

இயற்றியவர் : "சிவம்"
கோப்பாய்

யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.
இளவாலை.

*சமர்ப்பணம்*

வடக்கு கிழக்கு சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளரும்

எமது மன்ற ஸ்தாபகரும்



அமரர் சண்முகம் ஞானப்பிரகாசர்

# விழாக்குழுவின் இதயத்திலிருந்து....

நாம் நடந்து வந்த பாதையைச் சற்றுத் திரும்பிப்பார்க்கின்றோம். ஒன்றல்ல; இரண்டல்ல; பத்து ஆண்டுகள்; ஒரு தசாப்த காலம் ஓடிச் சென்று மறைந்து விட்டது. இந்தப் பத்து ஆண்டுகளில் தான் எத்தனை தடைகள்; எத்தனை சோதனைகள்; எத்தனை கஷ்டங்கள்; இவையத்தனையையும் எமது பத்தாண்டு காலச் செயற்பாட்டுத் திறனால், ஒட்டு மொத்தமாக முறியடித்து வெற்றிவாகை சூடி, எமது மன்றம் உருவாக்கப்பட்ட நோக்கங்களுள் கணிசமானவற்றையாவது அடைந்து விட்டோம் என்ற வெற்றிக் களிப்பில் இந்தப் பத்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த வேளையிலே......

முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் ( வடக்கு + கிழக்கு ) கூட்டுறவு சேவா இரத்தினம் 'கூட்டுறவுக்கு ஓர் ஒளிவிளக்கு' மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றவர், என்று பற்பல வார்த்தை ஆரங்களால், பாராட்டுப் பெற்றவரான அமரர் சண்முக ஞானப்பிரகாசம் அவர்களின் தனித்துவமான சிந்தனையின் பிரதிபலிப்பே இம்மன்றத்தினதும் கழகங்களினதும் உதயம் என்பதனையும் நாம் பத்தாவது ஆண்டு விழாக் கொண்டாடும் இவ்வேளையில் நினைவு கூருகின்றோம்.

இத்தருணம் எமது நன்றிக்கடனை ஓரளவுக்கேனும் அன்னாருக்குச் செலுத்தும் முகமாக, இச்சிறப்பு மலரை அமரரின் தாள்களில் சிரம் தாழ்த்தி அஞ்சலியுடன் சமர்ப்பணம் செய்கின்றோம்.

இம்மன்றத்தினை ஓர் ஸ்திரமான அமைப்பாக இங்கு ஸ்தாபிப்பதில் முன்னோடியாகவும், ஆலோசகராகவும் திகழ்ந்தவர்களுள், எமது மன்றத்தின் தவிசாளர் திரு ஸ்ரீ சண்முகராசா அவர்களையும் இங்கு நினைவு கூர்ந்து நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது கழகங்களையும், மன்றத்தினையும் கட்டிக்காத்து உருவாக்கி, வளர்த்தெடுப்பதில் பெரும் பங்கெடுத்து உழைத்து வந்த–உழைத்து வருகின்ற தலைவர்களான, திருமதி பேபிசரோஜா, கனகசபேசன், செல்வி, திருஞானசோதி, அருளம்பலம், திருமதி நவநீதம் ஜெகதீசன், திரு கோணையா தியாகராஜா ஆகியோரையும், காலத்துக்குக் காலம் தெரிவு செய்யப்பட்ட கடந்த கால, நிகழ்கால பணிப்பாளர் சபையினரையும், அங்கத்தவர்களையும், கழக நிர்வாக உறுப்பினர்களையும, ஊதியத்தினை எதிர்பாராது உழைக்கும் ஊழியர்களையும், அவர்கள் இந்தக் காலக் கட்டங்களில் தாங்கிக் கொண்ட இன்னல்களையும், கஷ்டங்களையும், தன்னலமற்ற சேவைகளையும் நாம் நன்றிப்பெருக்குடன் நினைத்துப் பார்க்கின்றோம். அவர்கள் இம்மன்றத்தின் மூலம் சமூகத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவையின் மகத்துவத்தை என்றென்றும் எல்லோரது நெஞ்சிலும் நிலைத்து நிற்கச் செய்ய வேண்டுமென்கின்ற பேரவாவினால் இந்தச் சிறப்பு மலரிலே அவற்றைச் சாசனப்படுத்துகின்றோம்.

1988 ஆம் ஆண்டிலிருந்து — 1990 ஆம் ஆண்டு கார்த்திகை வரையும் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசமும் 1990 மார்கழி தொடக்கம் இற்றைவரை திருமதி ருக்மணி ஆனந்தவேல் அவர்களும் இணைப்பதிகாரிகளாக இருந்து எமது மன்றத்தினையும் கழகங்களையும் சரியான பாதையில் வழி நடாத்தி எமக்குக் கலங்கரை விளக்கமாக விளங்குகின்றார்கள். தமது சிறந்த நிர்வாகத்தினாலும் செயலாற்றலினாலும், மன்றத்தின் வலுவை வலியுறுத்தி வளம் படுத்தும்

உன்னத பணியினை மேற்கொண்டு அளப் பரிய சேவையினை ஆற்றி வருகின்றார்கள். இவர்களின் சேவை நன்றி கூறப்படுவதுடன், தொடர்ந்தும் இவரினது சேவை எமக்குக் கிடைக்க வேண்டுமென்ற எமது ஆவலை வெளிப்படுத்திக் கொள்கின்றோம்.

எமது மன்றத்தின் ஆரம்ப நிர்வாகச் செயலாளராக, கடமை, கண்ணியம், கட்டுப் பாட்டுடன் கடமையாற்றிய திருமதி மதி வதனி ஜெயக்குமார் அவர்களுக்கும், தொடர்ந்து மன்ற ஆரம்ப காலத்திலிருந்தே பல்வேறு பதவிகளில் அலங்கரித்து மன்றத் தின் கட்டுக்கோப்புக்களை சீர்குலையாது, மன்றத்தினதும், கழகங்களினதும் வளர்ச்சிப் பாதையை நோக்கி வழிநடாத்திச் செல்லும் நிர்வாகச் செயலாளர் திருமதி திருஞான ஜோதி குணேந்திரன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். ஆரம்ப காலம் தொட்டு, நீண்ட காலமாக, நிர்வாக உறுப்பினர்களாக இருந்து வேண்டிய ஆலோசனைகள் வழங்கி, வழிநடத்திய; செல்வி த. நல்லதம்பி, செல்வி. க. வைகுந்த ராணி, திருமதி. வ. இந்திரராஜா, திருமதி. ந. மகேஸ்வரி, திருமதி நடராசா, திருமதி. ஜெ ஜோசெப் திரு. சிவரத்தினம், திருமதி. ச. பரமானந்தம், ஆகியோரின் சேவைகள் அளப்பரிய தாகும்.

இம்மன்றத்தின் எதிர்காலத்தில் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் வழிநின்று, மக்களின் நலனுக்காக; மன்றத் தின் வளர்ச்சிக்காக; சமூக மேம்பாட்டிற்காக செயற்படுவதே, நாம் அமரருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

' நன்றி மறப்பது நன்றன்றே ' மன்றத் தின் 10 வது ஆண்டு தமிழ் ஈழ மக்களின் அபிவிருத்தி ஆண்டாக மிளிர வாழ்த்துக்கள்! வாழ்க மன்றம்! வளர்க மன்றத்தின் பணிகள்!

வணக்கம்!

விழாக்குழு

*சேமிப்பு, ஐக்கியம், நாணயம், ஒற்றுமை பல கற்றுத் தந்தாய், அறிமுகம், அனுபவம் பலனைவைத்தாய் கருத்தரங்கு, பயிற்சி வகுப்புகளால் அறிவை வளர்த்தாய் தொடரட்டும் உன்பணி பலகோடி.*

# ஆசிச்செய்தி

சமூக அபிவிருத்தி மன்றத்தின் 10 வது ஆண்டு நினைவு மலருக்கு இச்செய்தியைப் பிரசுரிப்பதில் பெருமிதமடைகிறேன்.

1988 ஆம் ஆண்டு யாழ். மாவட்டமே ஓர் இருள் காலம், போராட்ட காலம் எனலாம். இக் காலப்பகுதியிலே, திரு. சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் ஈழம் வாழ் தமிழினம் படும் இன்னல் களைச் சகிக்கமுடியாத நிலையிலே, யாழ். மாவட்டம் தோறும் கிராமம் கிராமமாகச் சென்று ஏழைகள், அநாதைகள், விதவைகள், ஊனமுற்றோர் என்ற வரிசையில் மக்களை இனங்கண்டு, சமூக அபி விருத்திப் பாதையிலே முன்னெடுத்துச் சென்றார்.

இம்மன்றமானது கிராமங்கள்தோறும் சேமிப்புக் கழகங்களை அமைத்து மக்களிடையே சேமிப்பு என்னும் பழக்கத்தையும் உரு வாக்கி இன்று சுழற்சி முறையிலே கடன் உதவிகளையும் செய்து அபிவிருத்திப் பாதையிலே மக்களை வீறுநடைபோடச்செய்கின்றது. இதன் ஊடாக மக்கள் பல துறைகளிலும் அபிவிருத்தியடைந்து தன் காலிலே நின்று வாழ்க்கையை நடத்தும் ஓர் உன்னத நிலையை அடைந்துள்ளார்கள். இம் மக்களே இம்மன்றத்தை போற்றிப் புகழும் அளவிற்கு இம்மன்றம் இன்று தன் செயல் திறமையைக் காட்டி வருகிறது.

''நீ எதைச் செய்தாலும் உள்ளக் களிப்புடனும், கூட்டாகவும் செய்யக் கற்றுக்கொள். நீ ஓர் திடமான பிரயோசனமுள்ளவனாகத் திகழ்வாய். உனது உள்ளத்தின் வலிமை சிந்திக்கத் தொடங்கும். அப்போது உனது லட்சியம் திடமானதாகச் செயற்படும். நீ எதை அடைய விரும்புகிறாயோ அதை அடைவாய், நீ உனது இதயத் திற்கோ, அல்லது இந்த உலகத்திற்கோ நண்பர்களுக்கோ பாரமாக இருக்க மாட்டாய்.

யாழ். சமூக அபிவிருத்தி மன்றமானது தனது 10 ஆவது ஆண் டினை வரவேற்கும் இவ்வேளையில் இப் 10 ஆவது ஆண்டு ஓர் அபி விருத்தி ஆண்டாகவும், மக்கள் அனைவரும் பஞ்சம் பட்டினி என்ப தனைக் களைய, சமூக அபிவிருத்தியை முன்னெடுத்துச் சென்று, சாந்தியும், சமாதானமும் பெற்று வாழ வேண்டுமென இறைவனை வேண்டி இம்மன்ற உறுப்பினர்கள், பணியாளர்கள், பணிப்பாளர்கள் அனைவரும் நிலையான செல்வமும் குறையாத வளமும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

''அன்பிலார் எல்லாம் தமக்கு உரியார்
அன்புடையார் என்றும் உரியார் பிறர்க்கு''

**கோ. தியாகராசா**
தலைவர்
சமூக அபிவிருத்தி மன்றம்
யாழ்ப்பாணம்

சமூக அபிவிருத்தி மன்றத்தின்
10 வது ஆண்டு விழாவின்

# ஆசிச்செய்தி

" சொல்லாமலே செய்வார் பெரியார் " என்பதற்கு ஏற்ப மக்களுக்கு இன்னல்கள் ஏற்பட்ட போதெல்லாம் குறிப்பாக கடந்த தசாப்த காலப்பகுதியின் போது வலிந்து உதவி வந்த இப்போதும் உதவிக்கொண்டிருக்கின்ற தலை சிறந்த தொண்டர் நிறுவனங்களில் ஒன்று " யாழ். சமூக அபிவிருத்தி மன்றம் " என்றால் அது மிகையாகாது. தேவைக்கேற்ப இதே போன்ற தொண்டர் நிறுவனங்கள் இக் குடா நாட்டில் தோன்றி தம்மாலான பணியை, தொண்டை ஆற்றியமையால்தான் இப் பகுதி மக்களிற் பல் லாயிரக்கணக்கானோர் குறிப்பாக சமூகத்தில் மிகவும் நலிந்த பிரிவினர் தம்மை ஓரளவுக்காயினும் நிலை நிறுத்த முடிந்தது. இவ்வாறாக தொண்டாற்றி வரும் இவ்வாறான மன்றங்களோடு யாழ். சமூக அபிவிருத்தி மன்றமும் மென் மேலும் வளர்ந்து நிழல் பரப்ப வேண்டி வாழ்த்துகிறேன்.

**க. சண்முகநாதன்**
*யாழ். அரசாங்க அதிபர்*

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாணத்தில் கடந்த பல ஆண்டுகளாக சமூக அபிவிருத்தி மன்றம் தனது தலைமை அலுவலகத்தை ஸ்ரான்லி வீதியில் அமைத்து மக்களுக்கு மிகுந்த சேவையாற்றி வருகின்றது. குறிப்பாக விதவைகளுக்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களுக்கும் புனர்வாழ்வளிக்கும் வகையில் உதவிகள் புரிந்து வருவதை கடந்த காலங்களில் அவதானிக்க முடிந்தது. தனது 10ஆவது ஆண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த விழாவினை கொண்டாடும் இந்நேரத்தில் தனது சேவையையும், பணிகளையும் மிகவும் சிறந்த முறையில் மிகுந்த ஈடுபாட்டுடன் செய்து இந்த மாவட்டத்தில் இருக்கும் மக்களுக்கு குறிப்பாக வறுமைக் கோட்டிற்குட்பட்டு வாழும் மக்களுக்கும், விதவைகளுக்கும் தனது உதவிகளையும் ஒத்தாசைகளையும் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்நிறுவனம் மேலும் வளர்ந்து பல பணிகளைச் செய்ய இறைவன் துணைபுரிய வேண்டுமென்று வேண்டிக் கொள்கின்றேன்.

**து. வைத்திலிங்கம்**
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.

சமூக அபிவிருத்தி மன்றத்தின்
10 வது ஆண்டு நிறைவு
விழாவினை ஒட்டி அளிக்கப்பட்ட

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாண மக்கள் கஷ்டப்படும் காலங்களில் மக்கள் துயர் துடைக்க இருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களில் முக்கியமாகவுள்ள சமூக அபிவிருத்தி மன்றத்தின் செயற்பாடுகளை போற்றாதிருக்க முடியாது.

சமூக அபிவிருத்தி மன்றம் சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக பல செயற்றிட்டங்களை உருவாக்கி அமுலாக்கி மக்கள் நலனில் அக்கறை கொண்டு தமது சமூகப் பணியை மேம்படச் செய்து வருவது கண்கூடு.

தமது முயற்சியாலும் பல்வேறு நிறுவனங்களின் முயற்சியாலும் மக்களுக்கு அவசியமான சேவைகளை சிறந்த முறையில் நிறைவேற்றி மக்களின் நன்மதிப்பையும் ஆசியையும் கடந்த 10 வருடங்களாகப் பெற்று வருகிறது.

எதிர்காலத்தில் எமது நிலைமை சிறப்பாக அமைவதற்கு இப்படியான தொண்டு நிறுவனங்கள் அதிக அளவு சேவை செய்ய முன்வரவேண்டும்.

சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது மனமார்ந்த ஆசிகள்.

பேராசிரியர் V. K. கணேசலிங்கம்
தலைவர்
இ. செ. ச. யாழ். கிளை



திரு. கோ. தியாகராசா
( தலைவர் )
யாழ்/சமூக அபிவிருத்தி மன்றம்
1997 — 1998



திருமதி நவநீதம் ஜெகதீசன்
(முன்னைநாள் தலைவர்)
யாழ்/சமூக அபிவிருத்தி மன்றம்
1992 — 1997



திருமதி ருக்மணி ஆனந்தவேல் ( இணைப்பதிகாரி )
யாழ்/சமூக அபிவிருத்தி மன்றம் 1990 — இன்றுவரை



திருமதி
திருஞானசோதி குணேந்திரன்
முன்னைநாள் தலைவர் 1989-1992
தற்போதைய நிர்வாகச் செயலாளர்



திருமதி பேபி சறோசா
கனகசபேசன்
முன்னாள் தலைவர்
1988 — 1989

# அருளாசிச்செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்ற பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மன நிறைவு அடைகின்றோம். போர்காலச் சூழ்நிலையில் மன்றங்களின் பணி எங்கள் மக்கள் மத்தியில் மிகவும் அவசியமாக இருந்தது. அவ்வகையில் சமூக அபிவிருத்திச் சபையின் பணியும் இன்றியமையாதனவாக அமைந்திருந்தன. மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் வாழவேண்டும் என்பதே பேராவலாகும், வாழ்க்கை முறையை வளம்படுத்திக் கொடுப்பது அபிவிருத்தி மன்றங்களின் அத்தியாவசிய கடமையாகும். பத்து வருடங்களாக எங்கள் மக்களுக்கு துயர் துடைக்கும் பலவகையான பணிகளை இம் மன்றம் ஆற்றியது பாராட்டுதற்குரியதாகும். வருங் காலத்திலும் பல பணிகளை ஆற்றுவதற்கும் மன்றத்தை சார்ந்த உறுப்பினர்களுக்கும் இறைவனுடைய ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

'' என்றும் வேண்டும் இன்ப அன்பு ''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஸ்வாமிகள்
( இரண்டாவது குருமகா சந்நிதானம் )

# வாழ்க, வளர்க என வாழ்த்துகின்றோம்

சமூக அபிவிருத்தி மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் மலருக்குச் செய்தி ஒன்றை வழங்கும் வாய்ப்புக் கிடைத்தமை குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் என்ற பெயருடன் இயங்கிவரும் அரச சார்பற்ற எமது அமைப்பு, யாழ்ப்பாண மாவட்டத்திலே பழமை வாய்ந்த ஒன்றாகும். இது அரசாங்கத்தில் 0273 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. எங்கள் அமைப்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பில் ஓர் அங்கமாக இருக்கின்றது.

எங்கள் அமைப்பு பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு பலவழிகளிலும் பணியாற்றி வருகின்றது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இந்த மாவட்டத்திலே எங்கள் அமைப்பு குறிப்பிடத்தக்க புனர்வாழ்வு, புனரமைப்பு, நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளமை பெருமையுடன் குறிப்பிடத்தக்க விடையமாகும். எங்கள் அமைப்பின் முகாமைத்துவக் குழுவில் சகல துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

சமூக சேவைப் பணியில் தங்கள் அமைப்பு பத்தாண்டு சேவைளைப் பூர்த்தி செய்துள்ளமை அறிந்து மகிழ்கின்றேன். பத்தாண்டுப் பூர்த்தி விழாவை பெரிய அளவில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுவது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் கடந்த பத்தாண்டு காலத்தில் தாங்கள் ஆற்றிய பணிகளின் பெருமையை நாடும், மக்களும் அறியக் கூடியதாக இருக்கும்.

மக்கள் பணியை முன்னெடுத்துச் செல்லும் தாங்கள் சேவை பல் வளமும் பெற்று வளர வேண்டும், வாழ வேண்டும் என இதயம் கனிய வாழ்த்துகின்றோம். தங்கள் மன்றத்துக்கு எங்களால் செய்யக் கூடிய உதவிகளை என்றென்றும் செய்ய ஆயத்தமாக இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்கள் பணி பல்கிப் பெருகி வளர எமது வாழ்த்துக்கள்.

செ. சிவஞானம்
தலைவர்
அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983

# ஆசிச்செய்தி

*சமூக அபிவிருத்தி மன்றமானது 10வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இம்மகிழ்ச்சிகரமான வேளையில் அதனது செயற்திட்டங்களில் மேலும் மேலும் வளர்ச்சி பெறவும், சிறப்புறவும், மேன்மேலும் உயர்ச்சி பெறவும் நாம் மனமார வாழ்த்துகின்றோம்.*

*நன்றி*

திரு. ம. இராஜநாயகம்
F C A S A T

1. சோமேஸ்வரன், ஜே. எம். இராஜநாயகம் அன் கம்பனி,
பட்டயக்கணக்காளர்கள்.

2. எக்கவுண்டிங் சிஸ்ரம்ஸ் அன் சேவிர்சஸ் (யாழ்) லிமிட்டெட்,
இயக்குநர்,

# ஆசிச்செய்தி

யாழ் சமூக அபிவிருத்தி மன்றமானது தனது 10ஆம் ஆண்டு கால சேவையை நிறைவு செய்து 11ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த காலங்களில் எம்மத்தியில் ஏற்பட்ட இன்னல்கள், அனர்த்தங்கள் மத்தியிலும் நாம் எவ்வாறு அவயவங்களை இழந்தவர்கள் செயற்கை அவயவங்கள் பொருத்துவதன் மூலம் அவர்களின் இயல்பான வாழ்க்கைக்கு உதவி புரிந்தோமோ, அதுபோல் சமூக அபிவிருத்தி மன்றமும் மக்களின் சமூக மேம்பாட்டுக்காக பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

இன்று தனது 10ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் சமூக அபிவிருத்தி மன்றமானது இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

நன்றி

திருமதி. L. சிவராமலிங்கம்
தலைவி

# வாழ்த்துச்செய்தி

சமூக அபிவிருத்தி மன்றம் தனது பத்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இவ்வேளையில், மன்றத்தினை வாழ்த்துவதில் அறவழிப் போராட்டக் குழு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

எமது பிரதேசத்தில் ஒரு நிறுவனம் பத்து ஆண்டுகள் தொடர்ச்சியான மக்கள் சேவையில் ஈடுபட்டுவருவதென்பது உண்மையிலேயே ஒரு சாதனைமிக்க அம்சம் என்று தான் கூறவேண்டும். இந்த நிறுவனம் கடந்த துயர்மிக்க காலங்களில் மிக்க சமுதாய விசுவாசத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றிய அரிய பெரிய சேவைகளை தமிழ் சமுதாயம் இலகுவில் மறந்துவிட மாட்டாது என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இந்த நிறுவனத்தின் நிர்வாகிகளுடன் இணைந்து செயலாற்றிய காலம் எமக்கு இன்னமும் நினைவில்உள்ளது. நல்ல ஆரோக்கியமான பணிகளைத் திட்டமிட்ட வகையில் ஆற்றியமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

சமூக அபிவிருத்தி மன்றம் மென்மேலும் தனது பணிகளை விஸ்தரித்து, துன்பத்துடனும், துயரத்துடனும் வாழ்ந்து வருகின்ற எம் உடன் பிறப்புக்களின் பொருளாதார நிலையை உயர்த்தப் பாடுபடல் வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லதோர் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி தங்களின் செயல் திட்டங்களை நகர்த்தி சாதனை படைக்க எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

எம். கே. ஜீவகதாஸ்
கௌரவ செயலாளர்

வி. ஜீ. தங்கவேல்
தலைவர்

அறவழிப் போராட்டக் குழு

# ஆசிச்செய்தி

வரப்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயரும்!

என்ற ஔவைப்பிராட்டியாரின் வாக்குக்கு அமைய, யாழ் மாவட்டத்தில் வலிந்து உதவும் சமூக சேவை நிறுவனங்களில் தம் மக்களின் சேவையே மகேசன் சேவை என முன்னணியில் உள்ள அடிமட்ட கட்டமைப்பில் உருவாகிய அமைப்புகளில் சமூக அபிவிருத்தி மன்றமும் ஒன்று என்பது யாவரும் அறிந்ததே.

20–09–98-ல் தனது 10 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்நிறுவனம் கடந்த பத்தாண்டில் துடிப்புடன் தன்னால் ஆன சேவையை எவருக்கு என்ன தேவையோ அவற்றையெல்லாம் வழங்கி செயலாற்றி வருகின்றது. இம் மன்றம் இம் மாவட்டத்தில், முக்கியமாக பெண்களுக்கு என சேவையாற்ற ஒரு நிறுவனம் இல்லையே என்ற நிலை இல்லாமல் அவர்களும் சொந்தக் காலில் நின்று வாழ்வு வளம் பெற, பொருளாதாரத்தைப் பெருக்கிட, கல்வி, கலை, கலாச்சாரம் கமத்தொழில், வர்த்தகம், சுகாதாரம், தொழில்நுட்பம், அறிவியல் துறை அத்தோடு சிறார்களின் நல்வாழ்வுக்கு அடித்தளமிடும் பாலர் கல்வி போன்றவற்றையும் வளம் படுத்தி முன்னெடுத்துக் கொண்டிருக்கும் நிர்வாகத்தினரதும், சேவையாளர்களினதும் சேவையும், ''தூங்காது கண்விழித்திருக்கும் மீனைப்போன்று'' கருமமே கண்ணாக ஈடுபட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்நிறுவனம் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் ஓர் அங்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் அறுகு போல் வேர் ஊன்றி, ஆல் போல் தழைத்து ஓங்கி அதன் நிழல் எல்லோருக்கும் கிடைத்து வாழ்வு வளம் பெற என்றும் எம் நல்லாசிகள்!

''காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள ..''

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்...'' — குறள்

**அ. சி. சிவசுப்பிரமணியம்**
செயலாளர்

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்–யாழ் மாவட்டம்.

# வாழ்த்து

சமூக அபிவிருத்தி மன்றம் பல வருட காலங்களாக யாழ் மாவட்டத்தில் மக்களின் வறுமையை ஒழிக்கவும், அவர்களின் வாழ்க்கையை வளம்படுத்துவதற்காகவும் பல வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வந்துள்ளமை யாவரும் அறிந்ததே. சமூக அபிவிருத்தி மன்றம் பல வழிகளிலும் மக்களின் துயர் துடைப்பதற்காக அயராது பாடுபட்டுவரும் ஒரு அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனமாகும்.

இன்னலுற்ற மக்களுக்கும் இடர்ப்பட்ட சமூகத்திற்கும் இந்த ஸ்தாபனம் ஆற்றுகின்ற பணி போற்றுதற்குரியது. கடந்த காலங்களைப்போல் வருங்காலங்களிலும் இந்த ஸ்தாபனம் யாழ் தீவ கற்பக மக்களுக்கு உறுதுணையாக நின்று பல வேலைத்திட்டங்களை ஆற்றும் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

சமூக அபிவிருத்தி ஸ்தாபனத்தின் சேவைகள் மேலும் பல மடங்கு விருத்தியடைந்து, அதனால் மக்கள் நன்மை யடைய வேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றேன். நல்ல உள்ளம் கொண்ட இம் மன்றத்தினர் மக்களுக்கு தொடர்ந்தும் பல அரிய சேவையை ஆற்றுவதையிட்டு, நாம் பெருமைப் படுகின்றோம்.

வளர்க சேவை! வளர்க சமூக அபிவிருத்தி மன்றம்!

எஸ். வீ. சங்கரப்பிள்ளை
செயற்திட்ட அத்தியட்சகர்

## *Message*

UNHCR Jaffna congratulates the Social Developmeut Foundation on it's 10th year of operation in the Jaffna District. UNCHR acknowledges the important work done by SDF for the most vulnerable groups in the society through their savings clubs. UNHCR also acknowledges and congratulates the hardworking and dedicated staff of SDF and wishes SDF the very best of luck in the future for their very important social work in a time when Jaffna's population needs the support of local organisations.

பத்தாவது ஆண்டினை நிறைவு செய்யும்
யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தினை வாழ்த்துகிறோம்

# வினோ நகைப் பூங்கா

## தங்க, வைர நகை வியாபாரம்



நவீன அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

22 கரட் தங்க நகைகள்
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.



185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## *வாழ்த்துகிறோம்*

எம் கடன் பணிசெய்து கிடப்பதே
— என்று
பாங்குடனே பணிபுரிந்து பணிவாழ்வில்
பத்தாம் ஆண்டில் பூரிக்கும்
— மன்றமே
கைகொடுத்து கரையேற்றும்
— பணிவாழ்வை
பத்து பதினாயிரம் ஆண்டுகள் தொடர
மனமார வாழ்த்துகிறோம்.

**Project Manager**
CARE International
No. 15, Kandy Road,
Jaffna.

***திட்ட முகாமையாளர்***
**கெயர் சர்வதேசம்**
**15, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

10வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும்
சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள்

பெண்களுக்கு உகந்த Two - Wheeler

SUZUKI,
T. V. S. SCOOTY,
T. V. S. CHAMP

Motor Cycles உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின்
ஏகவிநியோகஸ்தர்கள்

**பிறிமியர் ஓட்டோமோட்டிவ்ஸ்**

**ஸ்தாபனத்தார்**

**338**, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

உங்கள் டீசல் வாகன,

யந்திர இன்ஜெக்டர் பம், நொசல்

ஆகியவற்றை சிறந்த முறையில் பழுதுபார்ப்பதற்கும்,

உதிரிப்பாகங்களுக்கும் நாடுங்கள்

▼
▼
▼

**குரு டீசல் இன்ஜினியஸ்**

**338, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

பத்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடும்
யா / சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள்

# P. S. SERVICE STATION

257/1, Stanley Road,
Jaffna.

Engine Oil, Gear Oil, Sock Oil, Brake Oil Etc, Grease Tin
Penerating Oil, Pol. Cloth.

- வாகனங்களுக்குரிய ஒயில் வகைகள் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்கப்படும்

* சகல வாகனங்களும் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்

257/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின்
பத்தாவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்

# ரட்ணாஸ்

## வைண்டிங் வேக்ஸ்

★ சகல விதமான வைண்டிங் வேலைகளும்

- மின்சார உபகரணங்கள்
- மோட்டார் சைக்கிள்
- அவுட்மோட்டர்
- வாட்டர்பம்
- ஆட்டோ

ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

219, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

# மறைந்தும் மறையாத கூட்டுறவாளர்
# அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

கூட்டுறவே நாட்டுயர்வு எனும் தாரக மந்திரத்தைத் தமது லட்சியமாகக் கொண்டு வாழ்ந்து, நாட்டிற்கு நற்பணி புரிந்த அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மக்கள் மத்தியில் மறக்க முடியாத சிறந்த நற்பெருஞ் சேவையாளராகத் திகழ்ந்தவர். அவரது பொதுப்பணித் தாராள சிந்தையால் வாழ்ந்த இன்றும் வாழும், இனிமேலும் தொடர்ந்து வாழக் கூடியதுமான பரந்துபட்ட கூட்டுறவுப் பணி மகத்தானதொன்றாகும். படித்தவர்கள், பாமரமக்கள் ஏழை எளியவர்கள், கல்விச்சிறார்கள், விவசாய, கைத்தொழில், கமத்தொழில் வர்த்தக உத்தியோகத்துறை சார்ந்த பல்லோரும் அமரர் அவர்களின் கூட்டுறவுப் பணியாற் பயன் பல பெற்றமை மறுக்க, மறைக்க முடியாததாகும்.

1989 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் அரசகேசரி வினாயகர் சமூக அபிவிருத்தி மன்றமும் அமரர் அவர்களின் வழிகாட்டலில், லட்சியப் பாதையில் பணியாற்றி வருவதைச் சுட்டிக்காட்டும்போது, பெரியார் ஞானப்பிரகாசம் அவர்களை மன நிறைந்த நன்றியுணர்வோடு சிந்திப்பதுடன் அவரது லட்சியப்பாதையை நாமும் இணைந்து செப்பனிடுவது உறுதிப்பாடானதாகும்.

அமரர் ஞானப்பிரகாசம் அவர்களது கூட்டுறவுப் பணியானது பரந்து விரிந்த பெரும் ஆலவிருட்சம்போல எம் மக்கட்குப் பெரு நிழலாக என்றும் விளங்குவதனால் அமரரின் புகழுடம்பு அழியாத தன்மையதாய் விளங்குகின்றது. அமரர் நாமம் என்றும் வாழ்க.

# சமூக அபிருத்தியும் சமூக மன்றங்களும்

சமூக மன்றங்கள் சமூகத்தினாலே, சமூகத்தையுடையவனவாக, சமூகத்துக்குப் பயன்படுவனவாக அமைவன. சமூக மன்றங்கள் பெரும்பாலும் சேவை மனப்பான்மையுடைய சிலருடைய முயற்சியிலேயே தொடங்கப்படுகின்றன. பின்னர், சமூக அங்கத்தினர் பலர் அவற்றிலே சேர்ந்து கொள்கின்றனர். சமூக மன்றங்களுடைய நோக்கங்களையும் அவற்றின் பணிகளையும் பல நூறுகளாக வெளிவந்துள்ள சனசமூக நிலைய இதழ்களை நோக்கினால் நன்கு அறியலாம்.

**எடுத்துக்காட்டாக ஒரு சமூக மன்றம்**

> ''வெளி உலகம் தெரியாத கிணற்றுத்தவளைகளாய் நாமுண்டு நமது மக்களுண்டு என்று வாழாமல், நாலுபேர் போற்றும் வகையிலே நாடு போற்றும் நன்மக்களாய் பலதும் தெரிந்த பல்கலைப் புலவராய்த் திகழவேண்டும். பண்பின் சிகரமாய் அன்பின் உறைவிடமாய் ''இவர்களல்லோ இளைஞர்கள்'' என்று பாரோர் மூக்கில் விரல் வைத்து வியக்கும் வகையில் படிப்பறிவு மிக்க பண்புள்ளங்கொண்ட இளைஞர்களாக மிளிரவேண்டும். சமூகத்திலே ஒற்றுமை வேண்டும்...''

என்று தன்னுடைய நோக்கினை எடுத்துக்கூறுகின்றது இவ்வாறு நல்ல நோக்குகளைக் கொண்ட சமூக அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும்.

சமூக அபிவிருத்தியென்பது, ஒரு சமூக மக்களுடைய கல்வி, தொழில், வாழிடம், உடல்நலம், ஆன்மீக முன்னேற்றம் என்பனவற்றின் நல்ல வளர்ச்சி நிலையைக் குறிக்கின்றது. உயர்நிலையிலே அரச நிபுணர்களாலே ஆக்கப்பட்டு பரவலாக்கப்படும் அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு அவை அடிநிலை மக்களிடம் செல்லவேண்டியுள்ளன. அடிநிலை மக்கள் நிலையிலே அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தச் சனசமூக மன்றங்கள் பேருதவி வழங்குவனவாக அமையவேண்டியுள்ளன தற்போது எமது பிரதேசத்திலே நடைபெறும் மறுசீரமைப்பு வேலைகளிலே ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இத்தகைய சமூக மன்றங்களுடைய உதவிக் கரங்களை நாடிநிற்கின்றன. சமூக மன்றங்களுடாக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் வேளையில், அவற்றின் பயன் பெருந்தொகையான அடிநிலை மக்களைச் சென்று சேரும் வாய்ப்புண்டு. போதுமான நிதியில்லாத போதும், பல சனசமூக மன்றங்கள் தமக்குள்ளே ஓரளவு நிதியைத் தேடித் தமது பிரதேச மக்களின் அறிவு வளர்ச்சி, உடல் – உள நல வளர்ச்சி, சிறிய அளவிலான பொருளாதார வளர்ச்சி ஆகியனவற்றுக்கு உதவி வந்துள்ளன. எங்கள் மக்களுடைய அறிவளவு மிகவும் குறைந்த நிலைக்குப் போய்க்கொண்டிருக்கின்றது. எல்லோருக்கும் உயர்கல்வி வேண்டும். அப்பொழுது எம்முடைய பல சமூகச் சிக்கல்கள் தாமாகவே தீர்ந்துவிடும். இவ்வாறு எல்லோருக்கும் கல்வி; எல்லோருக்கும் அறிவு வளர்ச்சி என்பதைச் சமூக மன்றங்கள் அடிநிலையிலேயிருந்து முன்னெடுக்கலாம். இன்று நாம் செய்யவேண்டிய பணிகளில் இது மிகவும் முதன்மை வாய்ந்ததாகும்.

சிறிய அளவிலான பொருளாதார வளர்ச்சிக்குச் சமூக மன்றங்களுடைய பணி வேண்டியதாயுள்ளது சமூக மக்கள் யாவரும் இன்புற்றிருக்க வேண்டுமானால் எல்லோருக்கும் ஏற்ற பண வருவாய் இருக்க வேண்டும் அரச பணிகள், தனிப்பட்ட நிறுவனப் பணிகள் ஆகியவற்றிலே தொழில் செய்பவர்கள், சொந்தத் தொழில்களிலே ஈடுபட்டிருப்பவர்கள் ஆகியோரைத் தவிர, ஏனையோர் ஏதாவது பணிசெய்து பொருளீட்டவும், அவர்களுடைய அப்பணி சமூகத்துக்குப் பயன்பாடுடையதாகவும் சமூக வளர்ச்சிக்கு மேலும் முன்னெடுப்பினை வழங்குவதாகவும் அமையலாம். சிறு முதலீடுகளை இட்டு, சிறிய தொழிற்சாலைகளைத் தம்முடைய பிரதேசங்களிலே அமைப்பதற்குச் சமூக மன்றங்கள் முயற்சி செய்யலாம், இவ்விடயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சமூக மன்றங்கள் இணைந்து செயற்படலாம்.

சமூக மன்றங்கள் தொடர்பாக, குறிப்பாக சமூக அபிவிருத்தி நோக்கில் என் மனத்திலே பல எண்ணங்கள் எழுவதுண்டு. அவை யாவற்றையும் இங்கு எழுதுவதற்கு வாய்ப்பில்லை. ஓரிருவிடயங்களையேனும் சுருக்கமாக இங்கு குறிப்பிடுதற்கு வாய்ப்பளித்த சமூக அபிவிருத்தி மன்றத்துக்கு நன்றி கூறுகின்றேன்.

பேராசிரியர் கலாநிதி
அ. சண்முகதாஸ்
கலைப்பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் அருளால் ஆசிகள் பல கோடி.*

*அரச சார்பற்ற நிறுவனமான சமூக அபிவிருத்தி மன்றமே மெச்சுகிறேன் உனது துணிவுகரமான 10 ஆண்டு செயல் திறனை வாழ்த்துகிறேன் பல கோடி.*

*மனமுவர்ந்தாய் மாணவருக்கு வாழ்வகுத்தாய் கணவனை இழந்தோர்க்கு, வழிகாட்டினாய் வறியோர்க்கு ஆதரவளித்தாய் அனாதைகட்கு என்னே உன் பெருமை பல கோடி.*

*பாலர் முன் பள்ளி அமைத்திட்டாய் பாலர் பலரை சேர்த்திட்டாய் அதனால் பல பாலர் ஆசிரியர்களை அல்லவா எமக்கு தந்துவிட்டாய் வாழ்க நீ பல கோடி.*

# திட்டம் தீட்டிய தீர்க்கதரிசி ★ ★

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

என்னும் பாரதியின் பாடலை மெய்ப்பிக்கச் செய்து நாட்டின் வளம் பெருக்கும் அமைப்புக்களை உருவாக்கி மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழத் திட்டம் தீட்டி வழி வகுத்தவர்கள் என்றும் மக்கள் மனதை விட்டகலாதவர்களாகும்.

அந்த வகையில் இன்று யாழ். மாவட்டம் பூராவும் பல்வேறு வகைப்பட்ட சேவைகளைச் செய்து பாலர் முதல் விருத்தர் வரை பயனடைய வழிவகுத்துச் சேவையாற்றிக் கொண்டிருக்கும் சமூக அபிவிருத்தி மன்றத்தினை உருவாக்கியதுடன் மட்டும் நின்றுவிடாமல் அதன் செயற்பாடுகளுக்கு வேண்டிய வேண்டியபடி திட்டங்களைத் தீட்டி வைத்த முன்னாள் சிரேஸ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் எம்மால் மறக்கமுடியாத ஒருவரும் மக்கள் நெஞ்சை விட்டு நீங்காத ஒருவருமாவார்.

மக்கள் பல்வேறுபட்ட இன்னல்களின் மத்தியில் மிகவும் கஸ்ரமான சூழ்நிலையிலே வாழ்ந்து கொண்டிருந்த வேளை இந்த சமூகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் மக்களின் துயரங்களைத் துடைக்கவேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென இலட்சியக் கனவு கண்டவர் இம் மன்றத்தின் தலைவர் ஞானப்பிரகாசராவர்.

இம் மன்றமானது தனது 10வது ஆண்டு நிறைவு தினத்தைக் கொண்டாடும் இவ் வேளையில், மேற்படி நிறுவனம் செயலாற்றத் திட்டம் தீட்டிய தீர்க்கதரிசியை நினைவு கூரவும் அவருக்கு எமது செயற்பாடுகளைச் சமர்ப்பணம் செய்யவும்கடமைப் பட்டுள்ளோம்.

கிராமம்தோறும் நலிவுற்ற மக்கள் இருக்கும் இடங்களை இனம்கண்டு அங்கெல்லாம் சேமிப் புக்கழகங்களை உருவாக்கினார். வறுமை நிலையிலுள்ள மக்கள் அங்கத்தவர்களாக்கப் பட்டனர். மாதாந்தம் 20/- வேனும் சேமிக்க வேண்டுமென உந்தப்பட்டனர். மக்கள் வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்; சிறுகச் சிறுக சேமிக்க வேண்டும், எதிர்கால வாழ்க்கை பற்றிச் சிந்திக்க வேண்டும் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும்; ஒவ்வொரு சதமும் கவனமாகப் பேண வேண்டும்: நாளாந்தச் செலவில் ஒரு சிறு பகுதி ஏனும் சேமிக்க வேண்டும். என்ற நல்நோக்கங்கள் மக்கள் மனதில் பதிய வைக்கப்பட்டன. சேமிப்பே முதுமையின் நாற்காலி என்பதனை மக்கள் புரிந்து கொண்டனர். ஒரு ரூபாயே பல ரூபாவாக மாறும் என்ற உன்னத கருத்து மக்களின் மனதில் பதிந்து விட்டது. தமக்குரிய வங்கி மன்றத்தின் சேமிப்பு வங்கிகளே என்பதனை மக்கள் ஏற்றுக் கொண்டனர். கழகங்களின் மூலம் திரட்டப்பட்ட சேமிப்பானது "சிறு துளி பெருவெள்ளம்" என்பது போல் பல இலட்சம் ரூபாவாகப் பெருகியுள்ளது.

மக்களின் பொருளாதார விடிவு நோக்கி சிறு முயற்சிக் கடன்கள் இலகு முறையில் வழங்கப்பட்டது. இக்கடன்கள் வருமானம் தரும் நோக்கங்களுக்காக மட்டும் வழங்கப் பட்டன. சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு ஆதரவாளர்களாக மக்கள் மாறினார்கள்.

கிராமத்தின் மூலவழங்களும், மனித வளங்களும் முழுமையாகப் பயன் படுத்தப் பட்டன. தொழில் நுட்ப ஆலோசனைகள் பயிற்சிகள் வழங்கப்பட்டன. கிராமிய மக்களின் கரங்கள் உழைத்த பலன்கள் பல இலட்ச ரூபா முதலீடாகப்பெருகின. விதவைகள், அனாதரவற்றோர்களுக்கு வாழ்வழிக் கப்பட்டது. அவர்கள் வாழ்க்கை ஒளிமய மாகினது.

மன்றத்தின் வளர்ச்சிக்காக ஞானப்பிரகாசம் அவர்கள் தனது உயிரை துச்சமென மதித்து அயராது உழைத்த ஒருவராகும் தனது மனைவி, பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்தும் தன்சுகம் பாராது மக்களுக்காக இம் மண்ணில் இருந்து இரவு, பகல் என்று பாராது ஓடி உழைத்த ஒருவராகும். விவசாயிகளுக்கென; விதவைகளுக்கென; அநாதரவற்றவர்களுக்கென; ஊனமுற்றவர்களுக்கென வகை வகையான திட்டங்களை தயாரித்து நிதிபெறக்கூடிய அமைப்புக்களுக்கெல்லாம் அனுப்பி வைத்தார். இத்திட்டங்களின் நன்மைகளை மக்கள் இன்று இம் மன்றத்தின் மூலம் அனுபவித்து வருகின்றார்கள். இத்திட்டங்கள் யாவும் சமூக அபிவிருத்தி மன்றத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கான வழிகாட்டியாகவே அமைந்துள்ளது.

இப்படியாக பல்வேறு திட்டங்களை தீட்டி எம்மை வெற்றி கொள்ள தீர்க்க தரிசியாக விளங்கிய ஞானப்பிரகாசம் அவர்கள் 23-11-90 இல் இறை ஞானத்துள் அஸ்தமித்து விட்டார். அவர் மறைந்தாலும் அன்னாரது சேவைகள் மூலம் யாழ். மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் எங்கும் பிரகாசிக்கின்றார். சமூக அபிவிருத்தி மன்றம் பல்வேறு செயற்திட்டங்களை செய்து வருவதற்கு தீர்க்கதரிசனமாக அன்று திட்டம் தீட்டிய அந்தத் தீர்க்கதரிசியை என்றென்றும் மக்கள் மறக்க முடியாதவர்களாகவே உள்ளனர்.

'' உள்ளத்தாற் பொய்யா
தொழுகியமையால் உலகத்தார்
உள்ளத்துலெல்லாம் உறைந்து விட்டார் ''

அத்தீர்க்கதரிசியின் வழிகாட்டலில் இன்று எத்தனையோ தலைவர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். வீட்டுக்குள் முடங்கி இருந்த பெண்கள் வெளிக் கொணரப்பட்டனர். இம் மன்றமானது இன்று யாழ்மாவட்டத்திலே பல செயற் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் ஒரு அமைப்பாகச் செயற்பட்டு வருவது இம்மன்றத்தின் புனிதமான, தீர்க்க தரிசனமான சேவையையே எடுத்துக்காட்கின்றன. அன்று விதைத்த பணிகள் தசாப்த கால வளர்ச்சியில் ஆல்போல் வளர்ந்து பல்வேறு சேவைக் கிளைகளையும் பரப்தயுள்ளது.

இந்த அமைப்பின் செயற்பாடுகளை உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கும் அவரது ஆன்மாவிற்கு சாந்தி வேண்டி மன்றத்தின் செயற்பாடுகளை இம் மலர் மூலம் சமர்ப்பிக்கின்றோம்.

'' வெள்ளத் தனையது மலர் நீட்டம்
மாந்தர் தம்
உள்ளத் தனையது உயர்வு ''

**திருமதி ருக்மணி ஆனந்தவேல்**
இணைப்பதிகாரி
சமூக அபிவிருத்தி மன்றம்



# "சாதாரண" தமிழ்பெண்களின் கண்ணோட்டத்தில் பெண்ணியம்

இந்த விமர்சனக் கருத்தரங்கில் சாதாரண தமிழ்ப் பெண்களின் கண்ணோட்டத்தில் பெண்ணியம் என்னும் தலைப்பில் உரையொன்றினை வழங்குமாறு கேட்டுக்கொண்ட இதன் அமைப்பாளர் களுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித் துக் கொள்கின்றேன்.

'சாதாரண தமிழ்ப் பெண்கள்' என்று கூறும்போது எனது ஆய்வு வசதி கருதி, யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் பெண்களையே கருத்தில் எடுத்துக் கொள்கிறேன்.

பாலின வேறுபாடுகள் காரணமாக நிலவும் ஏற்றத் தாழ்வுகள் எல்லாச் சமுதா யத்திற்கும் பொதுவான ஒரு விடயமாகவே இருப்பதை பெண்நிலைச் சிந்தனையாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நிலைமை சகல மட்டப்பெண்களுக்குமுரியதாக இருந்த பொழுதிலும் சாதாரண பெண்களின் வாழ் வின் சகல பருவங்களிலும் இதனால் ஏற்படும் பாதிப்புகள் மிகவும் அதிகமாக இருப்பது வெளிக்கள ஆய்வுகளின்போது தெரிய வந்துள்ளது.

சாதாரண தமிழ்ப் பெண்களின் கண் ணோட்டத்தில் பெண்ணியம் என்ற விட யத்தை நோக்குவதற்குமுன் இவர்கள் வாழு கின்ற சமூகத்தின் அடிப்படை அமைப்பைப் பற்றி அறிதல் அவசியமாகும்.

ஆண் முதன்மை பெறும் தந்தை வழிச் சமூக அமைப்பில் பெண்களின் அன்றாட வாழ்வில் அவர்களை வழிநடத்தும் பல விதிகளும் ஒழுங்கு முறைகளும் வகுக்கப் பட்டு, அவளை இரண்டாம் தரப் பிரஜை யாகத் தள்ளி வைக்கும் சமூக நிறுவனங் களாக சமயம், திருமணம், குடும்பம் என்பன காணப்படுகின்றன. அரசியல், பொருளா தார பண்பாட்டு நிலைமைகளுக்கேற்ப பெண்ணின் தகுதி நிலையும் பங்குப் பணியும் வரையறுக்கப்பட்டுள்ளன. பெண் பொது வாக ஆத்ம தனித்துவமின்றி, தாய், மனைவி, புதல்வி என்ற உறவுகளின் சார்புநிலையே நோக்கப்படுகிறாள். அவள் ஒவ்வொரு நிலையிலும் தந்தை, கணவன், மகன் என்ற ஆண் உறவினரின் பாதுகாப்பிலேயே வாழ்க்கை நடத்துகிறாள். பாரம்பரியக் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் மேலும் வலுப்படுத்தும் வகையில், இவள் பொது வாழ்வில் ஈடுபடுவது மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. பெண் என்ற பாத்திரம் தன்னைச் சார்ந்திருப்பவர்களது நலன் களுக்கு உழைக்கும் 'முழு நேர உழைப்பாளி' என்ற கருத்து ஆண்கள் மனத்தில் பதிக்கப் பட்டுள்ளது.

இச்சமூகம் உயிர்ப்படைப்பிற்காக சிருஷ்டிக்கப்பட்ட உடற்கூற்றின் அடிப்படை யில் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்தி, சமத்துவமற்ற உறவுகளைப் பின்னி விட்டிருக் கின்றது. பாலியல் வேறுபாடும் அடிப்படை யில் தோன்றிய பண்பாட்டு நியமங்களும் அவை பெண்மீது பதித்துவிட்ட படிமங் களும்-பார்வைகளும் ஆண்-பெண் அசமத்து வத்தை நிலைநிறுத்தி வருகின்றன.

இவற்றின் பின்புலத்தில் சாதாரண தமிழ்ப் பெண்களின் நிலைமைகளை அவ தானிக்கும் பொழுது அவர்கள் வறுமை, அறியாமை என்ற பெரும்பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றனர். இவர்களுள் பெரும்பாலா னோர் 'டீன்ஏஜ்' எனப்படும் கட்டிளமைப் பருவத்தில் 'கண்டதும் காதல்' கொண்டு தமது வாழ்க்கையை அமைத்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

வாழ்கை பற்றிய எதுவித குறிக்கோளு மின்றி இணைந்த இவர்கள், கணவனின் குறைந்த வருவாயில் ஆண்டுக்கொரு குழந்தையாய் குறைந்தது ஐந்து வருடங் களில் மூன்று அல்லது நான்கு குழந்தைகளுக் குத் தாயாகி விடுகின்றனர். பெண்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிப்பது ஆண்களின் கடமையாக இருந்தபொழுதிலும் பெருகிவரும் பொருளாதாரத் தேவைகளைச் சீர்செய்ய முடியாத சூழலில், அவர்களது குடிப்பழக்கமும் இணைந்து அக்குடும் பத்தையே வறுமைச் சேற்றில் புதைக்கிறது இந்தக் குடும்பத் தலைவர்கள் பெண்கள் பால் தமக்குள்ள பொருளாதாரக் கடப் பாட்டை நிறைவேற்றாது தட்டிக் கழிக் கின்றனர்.

இந்த நிலையில் குடும்பம், வீடு என்ற வட்டத்திற்குள் சுழலும் பெண் குழந்தை களைப் பராமரித்தல், அவர்களை வளர்த் தல் என்பவற்றுடன் உணவுகளைத் தயாரித் தல், வீட்டையும் வீட்டுச் சுற்றுப்புறத்தையும் ஒழுங்காக வைத்திருத்தல், வீட்டுக்குத் தேவையான நீரைப் பெற்று வருதல், தன்னைத்தானே பாதுகாத்தல் (பிற ஆடவ ரிடமிருந்து) சகல நிலைகளிலும் கணவனுக்கு ஒத்தாசையாக இருத்தல் முதலிய கடமை களைச் சுமக்கவேண்டி நேரிடுகிறது.

குடும்பத்தில் உள்ள ஏனையோருக்குப் பின் தூங்கி முன் எழுந்து, அவர்களுக்குத் தன்னலங் கருதாது சேவை செய்பவளே சிறந்த குடும்பப் பெண் என்றும் வீட்டில் உள்ள ஆண்கள் அனைவரும் உண்டபின்னர் மீதியையே பெண்கள் உண்பது சிறந்த பண்பாகவும் கொள்ளப்படும் இச்சமூகத்தின் நடைமுறைகள் அவள் உடல் நலததைப் பெரிதும் பாதிப்பனவாக உள்ளன. சில குடும்பங்களில் வீட்டையும் குழந்தைகளை யும் கவனிப்பதோடு தனது உழைப்பை விற்றுத் தனது குடும்பத்திற்காக வருமா னத்தையும் பெறவேண்டியுள்ளது. இரட் டைத் தன்மை பொருந்திய இத்தகைய பொருளாதாரப் பங்கு அவளது குடும்ப நிலையை உயர்த்தக் கூடிய நிலையிலும் அமையவில்லை இவ்வாறு தேவைகளைப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஆறுதலோ சந்தோஷமோ இன்றி அல்லற்படுகிறார்கள்.

'ஆண் குடும்பத்தின் பிரதான உழைப் பாளி' என்ற கருத்தின் அடிப்படையில் ஒரு கணவனின் கடமை சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் தனது குடும் பத்தைப் பாதுகாப்பதற்கு உழைத்தல் ஆகும். பொதுவான பொருளாதார நடைமுறைகள் காரணமாக அவனால் இக் கடமையைச் சரிவரச் செய்யமுடியாமல் போனால், அவன் யாராலுமே குறைகூறப் படமாட்டான். அவனிடம் பாலியல் சார் பான நேர்மையும் எதிர்பார்ப்பதற்கில்லை. வழமையான ஓர் ஆணைப் பொறுத்தவரை அவனது வேலை நேரம் காலை 8.00 மணி யளவில் ஆரம்பித்து, மதிய போசனத்திற் காக ஒன்றரை மணி அல்லது இரண்டு மணி உட்பட மாலை 5.00 மணியளவில் முடிவ டைகிறது. அவன் தொழில் செய்யாத அதாவது உணவு அருந்துதல், நித்திரை செய்தல், குளித்தல், ஆடை கழுவுதல் முத லியவை கூடச் செய்யாத வேளைகளில் தனது குடும்ப அங்கத்துவ நண்பர்களுடன் உரையாடுதல், கடதாசி விளையாடுதல் கள்ளுத் தவறணைக்குச் செல்லுதல் முதலி வற்றில் செலவிடுவான். ஆண்களைப்பொறுத் தவரை எந்த மட்டத்தைச் சேர்ந்தவராக இருந்த பொழுதிலும் தொழில் செய்யும் நேரத்தைத் தவிர்ந்த ஏனைய நேரத்தை இவ்வாறே செலவிடுகின்றனர்.

தனது வருமானத்தை வீணாக செல வழித்து அதிகளவில் மதுபானம் அருந்தி காரணமில்லாது தலைவியை அடித்துத் துன்புறுத்தினாலும் பெண்ணானவள் 'கணவனே கண் கண்ட தெய்வம்' என்று வாழ வேண்டும்; "புல்லானாலும் புருஷன்' என்று போற்ற வேண்டும் என்று எமது சமூகம் கற்பிக்கின்றது." என்னிடம்

ஏவை ஏவை எதிர்பார்க்கப்படுகின்றனவோ, அவற்றை எல்லாம் செய்து முடித்து விட்டேன் '' என்று மனச் சாந்தியுடன் ஒரு பெண் சொல்லக் கேட்பது மிகக் கடினம். சதா குடும்பக் கடமைகளும் வேதனைக்கும் அழுத்த சுகயீனமுற்ற பொழுதுகளிலும் ஆறுதல் எடுக்கமுடியாத அவல நிலையில் காலத்தை ஓட்டுபவர்களாகவே பேணப்படுகின்றனர். ஒரு பெண் எப்போதும் வேலை செய்யவேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறாள். குடும்ப விவகாரங்களைப் பொறுத்தவரை சொல்வதைக் கேட்பதும் பணிந்து நடப்பதும் பெண்கள் செய்ய வேண்டியவை எனக் கருதப்படுகிறது. வீட்டுப் பொறுப்பை ஏற்ற நிலையிலும் முக்கிய முடிவுகளை எடுக்கும் உரிமை அவர்களுக்கில்லை, அன்றாட அலுவல்களை மட்டுமே நிர்வகிக்க முடியும். வீட்டு நிர்வாகத்திற்குரிய ஒழுங்கு முறைகள் அளுக்குப் பிறந்ததிலிருந்து பயிற்றுவிக்கப்படுகிறது. உரிமைகள் ஆண்களுக்கும், பொறுப்புக்கள் கடமைகள். பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. வயது வந்த ஆண்பிள்ளைகள் வீட்டு வேலைகளைச் செய்வது மதிப்புக் குறைவாகக் கருதப்படுகிறது சமூகத்திலும் வீட்டிலும் ஆண் - பெண் தொழிற்பாட்டில் உள்ள பிரிவினை வித்தியாசமான கண்ணோட்டத்தையும் வேறுபட்ட வடிவங்களையும் இருபாலாருக்கும் இடையில் கொண்டு வருகின்கின்றன.

பெண்களின் வாழ்க்கைநிலையைத் தீர்மானிப்பதில் நேரடியான பொருளாதாரக் காரணிகளைவிட அக்காரணிகளால் உருவாகிய பண்பாட்டுச் சூழல் பெரும்பங்கு வகிக்கிறது.

இந்நிலைமைகள் காரணமாகவே, கல்வியறிவும் பொருளாதார சுதந்திரமும் பெற்று சமுதாயக் கட்டுப்பாடுகளினால் அதிகம் பாதிக்கப்படாத கட்டுக்களில் வாழ விரும்பிய மேல்மட்டப் பெண்களின் அபிலாஷைகளிலிருந்து சாதாரண தமிழ்ப் பெண்கள் வேறுபடுகின்றனர்.

அன்றாட வாழ்க்கையில் அவலங்களும் போராட்டங்களுமே சாதாரண பெண்களின் பிரச்சனையாகத் தெரிய வருகின்றன. இந்த மட்டத்துப் பெண்களின் நிலைமைகளை அறிவதற்கு மூன்று கிராமங்களுக்குச் சென்று ஏறக்குறைய முப்பது பெண்களுடன் உரையாடியபொழுது பின்வரும் விடயங்களை இனங்காண முடிந்தது.

1. கணவன் குடும்பப் பொறுப்புகளில்லாது தினம் குடிபோதையில் வந்து மனைவியை மட்டுமன்றிப் பிள்ளைகளையும் அடித்துத் துன்புறுத்தல்.

2. இந்த வன்முறை நடவடிக்கைகளைச் சகிக்கமுடியாத பெண்கள் தமது குழந்தைகளுடன் தனித்து வாழ்தல்; அவன் வேறொரு பெண்ணை நாடிச் செல்லுதல்.

3. அளவுக்கதிகமான குடிப்பழக்கத்தினால் நோய்வாய்ப்பட்டு அல்லது விபத்துள்ளாகிக் கணவன் இறந்தபின், பிள்ளைகளுடன் வாழ்க்கைப் பாரத்தைச் சுமத்தல்.

4. நோய்வாய்ப்பட்ட கணவனையும் சேர்த்துக் குடும்பச் சுமையைத் தாங்குதல்.

இக்கிராமங்களில் கணவன், மனைவி இருவரும் இணைந்து உழைத்து ஒற்றுமையாகக் குடும்பம் நடத்தும் தொகையினர் மிகக் கணிசமாகவே காணப்படுகின்றனர். அவ்வாறு இருப்பவர்கள் ஓரளவு கல்வியறிவும் திட்டமிட்ட, நிரந்தர பொருளாதார முயற்சியும் உள்ளவர்களாகக் காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க விடயமாகும் மேற்கூறிய வகையினர் கல்வியறிவற்ற நிலையிலேயே உள்ளனர்.

இவர்களது இருப்பிடங்கள் மனிதக் குடியிருப்புக்கொவ்வாத நில, நீர் வளங் குறைந்த பிரதேசமாக இருப்பதுடன், நெருக்கமான சிறு சிறு ஓலைக் குடிசைகளா

கவே காணப்படுகின்றன. ஆடு, மாடுகள் கட்டும் குடில்களுக்கு ஒப்பான இந்தக் குடிசைகளில், குறைந்தது ஐந்து அல்லது ஆறு பேர் வரை வாழ்கின்றனர். கிணறு, மல, சலகூட வசதியற்றவர்களாக இருப்ப தனால் சுத்தம் சுகாதாரம் என்பவற்றைப் பேணுவது மிக கடினமாக உள்ளது. வயற் பரப்பில் உள்ள கிணற்றினைச் சுற்றி ஏந்நேரமும் கூட்டம் நிறைந்து காணப்படு கிறது

மீன் பிடித்தல், சிப்பி அரித்தல், கள் இறக்குதல், இவற்றை வியாபாரஞ் செய்தல், வயல் வேலைகளில் ஈடுபடுதல், சலவை, முடி திருத்துதல் முதலிய தொழில்கள் இவர்களது ஜீவனோபாய நடவடிக்கை களாக உள்ளன. வருவாய் குறைவாகவும் தங்கி வாழ்வோர் தொகை அதிகமாகவும் இருப்பதால் வயிற்றுப்பசியைத் தீர்ப்பதே பெரும்பாடாகவுள்ள நிலையில் ஆண்களின் குடிப்பழக்கம் இக்குடும்பங்களின் வாழ்வை மேலும் சிரமிக்கின்றது இக்காரணமாகக் குடும்பத்தில் உள்ள அனைவரும் போசாக் கின்மையால் உடல் நலத்தை இழக்கின்றனர். இவர்களது ஆரோக்கியக் குறைவு உற்பத்தித் திறனைக் குறைத்து நிகழ்காலத்தை மட்டு மன்றி எதிர்காலத்தையும் பயங்கரமாக்கு கிறது.

அறியாமை, வறுமை காரணமாக நிறையுணவின்மை, குடியிருப்பு வசதி யின்மை, ஒழுங்கற்ற மல சலகூடங்கள் சுத்தமற்ற நீர் என்பவற்றினால் நோய் வாய்ப்படும் மக்களைப் பராமரிக்க அரசு இலவச வைத்திய நிலையங்களை நிறுவிய போதிலும் ஏழ்மையிலிருந்தும் தமது நிலை மையிலிருந்தும் தாங்கள் ஒருபோதும் மீள முடியாது என்ற மனவுணர்வு இவர்களை மேலும் சோர்வடையச் செய்கிறது.

வீட்டு நிலைமைகளும் அளவற்ற வறுமையும் ஆண்களுக்கும் பொதுவானவை என ஒருவர் நினைக்கலாம். இங்கு தான் சாதாரண தமிழ்ப் பெண்களின் பெண்ணியச் சிறந்தனைகள் தோற்றம் பெறுகின்றன.

பெண்ணுக்கு வீடே சகலமுமானநிலை யில் அவளது பிரச்சினையின் மையமும் அங்கேயே தோன்றுகிறது. இதனால் தான் பெண்நிலைவாதிகள் குடும்பம், வீடு என்பன உடைக்கப்படவேண்டும் என்கின்றனர்.

அதிகாலை அனைவருக்கும் முன் விழித் தெழுந்து ஏறக்குறைய பன்னிரண்டு மணித் தியாலங்களும் தனது குடும்பத்திற்காக உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள் ளாகும் சூழலில் அவளது உயிரியல் வேறு பாடே அவள் எதிர்நோக்கும் இடர்ப்பாடு கள் அனைத்துக்கும் அடிப்படையாவதை உணர்கிறாள். இந்த உணர்வு தார்மீகக் கோபமாக உள்ளே சென்று, ஓர்மத்துடன் அவளைச் செயற்பட வைக்கிறது.

ஒரு பெண் ஐந்து பிள்ளைகளைப் பெற்றபின், குடித்துவிட்டு வந்து துன்புறுத் தியதைச் சகிக்காது, கணவவை விட்டுப் பிரிந்து, பத்து வருடமாக அரிசி இடித்தல் முதலிய கூலி வேலைகளைச் செய்து தனது குடும்பத்தைப் பராமரித்து வருவதாகக் கூறினாள். மூத்த பிள்ளைக்கு பதினேழு வயது என்றும் கூறினார். பிள்ளைகள் இனிமேல் குடும்பத்துக்கு உதவுவார்கள்; உங்கள் சுமை சற்றுக் குறைய வாய்ப்பு இருக்கிறது என்றபோது அவர்களும் தகப் பன் வழியில் தானே செல்வார்கள். பெண் பிள்ளைகள் தான் பாவம்! என்று பெருமூச்சு விட்டார்.

இன்னொரு குடும்பத்தில் மகன் குடித்து நோய்வாய்ப்பட்டு இருப்பதாகவும் மருமகள், பேரப்பிள்ளைகளைத் தான் மட்டும் சந்தை யில் வியாபாரஞ் செய்து பாரமரிப்பதாகவும் ஒரு வயோதிப மாது கூறினார். இவ்வாறு பல ஏழைக்குடும்பங்களுக்கு வயது வந்த பெண்கள் ஆதார சக்தியாக விளங்குவதைக் கள ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. கட்டிள மைப் பருவத்தில் இனக்கவர்ச்சிக்கு உட்பட்டு குழந்தைகளைப் பெற்று ஆடவனால் கைவிடப்பட்ட பெண்களைப் பராமரிக்கும்

பளு இவர்கள்மேல் சுமத்தப்படுகிறது. இவ்வாறு வாழும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கணிசமானதாக உள்ளது. வயது வந்த பெண்களுள் ஒரு பகுதியினர் இவ்வாறு காணப்பட, சந்ததி உற்பத்திக்கட்டம் முடிவடைந்த இன்னொரு பகுதியினரின் அதிகாரமும் சுயாதிக்கமும் குடும்பத்துக்குள்ளேயும் வெளியேயும் அதிகரிக்கின்றது. அவர்கள் முன்னரிலும் பார்க்கச் சுதந்திரமாக நடமாடுவதுடன், இளந்தலைமுறைப் பெண்களைப் அதிகம் விமர்சிப்பவர்களாகவும் உள்ளனர்' பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்ற கருத்தும் இதனாலேயே நிலவுகிறது. மாமி, மச்சாள் முதலிய உறவுகளும் இந்த வகைப் பட்டனவே எனலாம்.

தினமும் குடித்து விட்டு வந்து உணவு, உடை, பாலியல் திருப்தி முதலிய பல தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு மனைவிமாரை வற்புறுத்தும் கணவன்மாரே கூடிய சதவிகிதத்தினராக இக்கிராமங்களில் உள்ளனர். 'சின்ன வயதில் தெரியாமல் செய்த பிழை, கிடந்து தவிக்கிறோம், என்று கையை விரித்துக் கண்ணீருடன் கூறிய பெண்கள் தமது அன்றாட சீவியத்துக்கு அண்ணன் தம்பி உறவை நாடுவதாகக் கூறினர்.

குடும்ப வாழ்க்கை, குழந்தைப்பேறு, வளர்ப்பு, சத்தற்ற உணவு, இடைவிடாத துன்பங்கள் ஏற்படுத்திய மனச்சோர்வு என்பன காரணமாக பொருளாதார முயற்சிகளில் ஈடுபட இயலாத நிலைமையைச் சிலர் தெரிவித்தனர்.

தினமும் குடித்துவிட்டு இரவில் வந்து தன்னையும் பிள்ளைகளையும் அடித்து விரட்டும் கணவன் ஆறு நாட்களாக வீடு திரும்பவில்லை, வராமல் விட்டாலே போதும், ஆக்கினை வேண்டாம். பிச்சை எடுத்தாவது நாம் நிம்மதியாக வாழ்வோம்.! என்று விரக்தியின் விளிம்பில் நின்று கூறினாள் ஒரு பெண்.

படிக்கக்கூடிய பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வசதியில்லாத நிலைமையைக் கூறிக் கலங்கினாள் ஒருபெண். இலவசக் கல்வி காணப்பட்டபோதிலும் பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி குடும்ப, பொருளாதார நிலையிலேயே தங்கியிருப்பதை உணர முடிந்தது இந்நிலைமைகளால் எதிர்கால சந்ததியினரின் ஆற்றல்களும் முனை மழுங்குவது பரிதாபகரமான விடயமாகும். இப்பிள்ளைகள் பெற்றோரை மதிக்காதவர்களாகவும் எதிர்ப்புணர்வுடன் கூடிய வக்கிர மனப்பான்மையுடனும் காணப்படுவதற்கு இவை காரணமாகின்றன.

நாற்பது வயதுப்பெண் குங்குமமும் குழந்தையுமாகக் காட்சியளித்தார் வெட்கத்துடன் தனது குடும்ப நிலைமைகளைக் கூறக் கூச்சப்பட்டு இருந்த நிலைமை குறிப்பிடத்தக்கது. 'அவரிடம் குடிப்பழக்கம் உண்டா? என்று வினவியபோது மலேரியாத் தடுப்பு இயக்கத்தில் பணிபுரியும் கணவன் குடிக்காமல் இருக்க முடியாது. அவர் என்னை அன்புடனும் ஆதரவுடனும் கவனிக்கிறார்! என்று கூறினார். இது பெண்கள் பற்றிய ஓர் உளவியல் உண்மையைப் புரிந்து கொள்ள உதவியது.

'கடின உழைப்பு ஆற்றுபவன் ஆண்மகனே, எனவே அவனுக்கு கவனிப்பு, ஓய்வு பொழுதுபோக்கு என்பன தேவையே' என்ற மனப்பாங்கு எமது சமுதாயத்தில் வேரூன்றிப் பெண்கள் மனத்தில் பதிந்திருப்பதை இச்சம்பவம் உறுதி செய்கிறது. இன்று தனது கணவன் தன்னை நன்றாக வைத்திருக்கின்றான்! என்று சொல்லிப் பெருமை பேசுவது கிராமப் பெண்களின் இயல்பாக இருப்பதையும் அறிந்து கொள்ள இந்நிகழ்ச்சி உதவி செய்தது. இந்த நிலைமை பெண் தன்னைப் பற்றி உணர்ந்து செயற்படுவதற்கு தடைக் கல்லாக அமைகின்றது. இந்த நிலைமையிலிருந்து இப்பெண்களை வெளிக்கொண்டு வருவதும் பெண்ணியச் சிந்தனையாளர்

களின் பொறுப்பாகும். கல்வியறிவுள்ளவர்களிடமும் இந்த மனோநிலையை அவதானிக்க முடிகிறது. இது மிகவும் வேதனைக்குரிய நிலைமையாகும். இவர்கள் தம்மைச் சுற்றி ஒரு மாயையை எழுப்பி வாழ்ந்து கொண்டிருப்பதை நோக்கும்பொழுது பரிதாபமாக உள்ளது.

ஓரளவு பொருளாதார நிலைமையில் உறுதி பெற்ற ஆண்கள் தமது குடும்பத்துக்கு அப்பாலும் பிற பெண்களின் தொடர்புடையவர்களாக இருப்பது பெண்களுடன் உரையாடியபொழுது தெரிய வந்தது. இந்த நிலைமையில் உள்ள பெண்கள் வெளியே தெரிந்தால் அவமானம் என எண்ணி உள்ளே குமைந்து கொண்டு வாழ்கிறார்கள். அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் ஆத்ம நிறைவில்லாது கணவனை விட்டு வெளியேறும் வகையுமறியாது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டுக் கருவிகளை உபயோகித்தல், கருத்தடைச் சிகிச்சைகள் பற்றிய அறிவு இவர்களிடம் ஓரளவு காணப்படுகிறது. அதற்கு உடன்படாத கணவன்மாரின் மனவுணர்வுகள், ஒத்துழைக்காத தன்மைகளால் பெண்கள் தொடர்ந்து தாய்மையுறும் அவலங்களையும் அறிய முடிந்தது. குடும்பக் கட்டுப்பாடுட்டு நடவடிக்கை காரணமாக அனைத்துப் பெண்களிடமும் காணப்பட்ட பொதுவான கருத்து என்னவெனில், கருத்தடைச் சிகிச்சையின் பின்பு 'தாங்கள் தளர்ந்து நோய்வாப்பட்டு விட்டோம்' என்பதாகும்.

இது பற்றிய உண்மை நிலையை அறிவதற்கு சமூக மருத்துவத் துறையை நாடியபோது உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கை ஒன்றை ஆதாரங் காட்டி பெண்கள் கருத்தடைச் சிகிச்சைக்கு முன்பு இருந்த நிலைமையைப் போலவே, பாலியல் திருப்தி உட்பட அனைத்து உடல் ஆரோக்கியத்தையும் உடையவராக இருப்பர் என்று கூறப்பட்டது. அத்துறையினர் இந்த தகவல் ஒன்று இங்கு குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பத்துப் பிள்ளைகள் உள்ள ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி ஆகிய இருவரும் கசிப்புக் குடித்துக் குடிபோதையில் இருப்பதாகவும் தந்தையின் நிரந்தரமற்ற வருவாயுடன் பதினெட்டு வயதுடைய இரண்டாவது பெண்பிள்ளையின் உழைப்புஞ் சேர்ந்து அக்குடும்பம் நடைபெறுவதாகவும், அப்பெண்பிள்ளை ஒருவருடன் ஏற்பட்ட தொடர்பினால் ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகி இருக்கும் அதே நேரத்தில் தாய்க்கும் இரண்டு வயதில் குழந்தை இருப்பதாகவும் குழந்தைப் பேற்றின்போது மாற்றி உடுப்பதற்கே துணியில்லாமல் இருக்கும் சூழ்நிலையிலும் பிள்ளைக்குத் தடுப்பூசி போடவேண்டிய காலத்திலும் தாம் நேரே சென்று உடுப்புகள், உணவுகளை வழங்கிப் பராமரிப்பதாகவும் தற்போது அப்பெண் இரத்தப் புற்றுநோய்க்குட்பட்டு இருப்பதனைக் கணவனுக்குத் தெரியப்படுத்தி தாய்மைப் பேறு அடைவது நல்லதல்ல என்று எச்சரித்த நிலையிலும் கணவனின் வரையறையற்ற இச்சை காரணமாக அப்பெண் தாய்மை அடைந்திருப்பதாகவும் கூறப்பட்ட அந்தச் செய்தி, சாதாரணப் பெண்ணின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகள் அனைத்தையும் வெளிக்கொண்டு வருவதாக உள்ளது.

இந்த மட்டத்துப் பெண்களுள் ஓரளவு பொருளாதார சுதந்திரம் பெற்றவர்களையும் காணமுடிந்தது வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் காரணமாகக் கணவன் மூலம் வருவாய் பெற்ற இப்பெண்கள் தமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணத் தவறி, மரபு நிலைப்பட்ட பெண்களின் 'புற' நடத்தைகளைப் பின்பற்ற முயலுவதை அவதானிக்க முடிந்தது. ஆடை, அணிகலன்களில் பற்றுக்கொண்டவராய் நடை, உடை பாவனைகளில் அம்மட்டத்துப் பெண்களை மாதிரியாகக் கொண்ட நடத்தைக் கோலங்

களில் ஈடுபடுகின்றனர். ஆணும், பெண்ணும் இணைந்து குடும்பத் திட்டமிடல் நடவடிக்கையில் பங்குகொண்டு தமது குடும்பத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முனைபவர்களையும் காணக்கூடியதாகவிருந்தது. பொதுவாக ஓரளவு பொருளாதார முன்னேற்றங் கொண்ட பெண்கள் தமது சொந்தக் காலில் நிற்கக்கூடிய திறனை வளர்க்கத் தவறியவர்களாக, சிந்தனை நிலையில் தமது தரத்தை உயர்த்தும் வாய்ப்பினை வளர்க்கும் ஆற்றலற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

சாதாரண தரத்தில் உள்ள இளம் பெண்கள் தமது தாய்மார் தன்னிச்சையாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டதால் தான் அவர்களது வாழ்க்கை வரண்டுவிட்டதாகவும் தமது திருமணம் முறைப்படி பெரியோர்களால் நிச்சயிக்கப்படவேண்டும் என்றும் கூறினர். உறுதியான தங்கு நிலையே எதிர்கால வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

உணவு, வசிப்பிடம், சுகாதார வசதி, தொழில் ஆகியவற்றில் இப்பெண்களது நிலைமை பெண்ணிலை நோக்கில், மனித உரிமைகள் தொடர்பானவை என்பது இப்போது புலனாகுகிறது. சாதிப்பாகுபாட்டுடன் இணைந்ததாகவும் இப்பால் பாகுபாடு காணப்படுவது இச்சமூகத்துக்குரிய தன்மையாக இருப்பதையும் நாம் இங்கு கவனிக்கத் தவறக்கூடாது.

ஆகவே, பெண்கள் தமது இழிநிலையிலிருந்து மீள வேண்டுமானால், பெண்ணினுடைய உற்பத்தித் திறன், உழைப்பு, பொருளாதார முக்கியத்துவம் என்பவற்றைக் கருத்தில் கொண்ட சமூக நலத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் என்பன வகுக்கப்படவேண்டும்.

பெண்களின் முன்னேற்றத்திற்கான தடையை இல்லாதொழித்துப் பெண்களின் முழு ஆற்றலையும் அவர்களே உணர்ந்து கொள்வதை வெளிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்.

சமூக உருவாக்கத்தில் பெண்களது வீட்டு உழைப்பும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது உணரப்பட வேண்டும்.

இவர்களுக்கு முறைசாராக் கல்வி மூலம்,

1. நல்வாழ்வுக் கல்வி
2. சுகாதாரக்கல்வி
3. நியையுணவு பற்றிய அறிவு
4. குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அறிவு

அளிக்கப்பட வேண்டும்.

அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் வேண்டிய நிதியுதவி, இருப்பிட வசதி என்பவற்றை வழங்க முன்வர வேண்டும்.

ஓரளவு எழுத்து, வாசிப்உள்ளவர்களும் கூடக் காலப்போக்கில் மறந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

பிறருடன் தொடர்பு கொள்வதற்கான அடிப்படைத் திறனையும் அறிவையும் பெறச் செய்யவேண்டும்.

இந்நிலைமை குடும்பத்தில் கலந்து பேசி உறவாடும் சமூகமான சூழலை உருவாக்கும். இதனால் முரண்பாடுகள் தவிர்க்கப்பட்டு புரிந்துணர்வு அதிகரிக்கும்; மணமுறிவுகள் குறையும்.

வருவாய்க்கேற்ற செலவுகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டுக் குடும்பத்தை நடத்தவும் ஆண், பெண் இருவரும் ஒன்றிணைந்து செயற்படுவர்.

இன்றும் தொடர்பு சாதனங்கள் மூலம் பெண்கள் சமூகத்திற்கு ஆற்றவேண்டிய பங்கு, அவர்களது பிரச்சனைகளுக்கான

ஆலோசனைகள் முதலிய பல விடயங்களை அளிக்க வேண்டும் தொலைக்காட்சி, சினிமா, விவரணச் சித்திரங்கள் இதற்குச் சிறந்த முறையில் பயன்படுத்தப்படலாம்.

காரியத்திறன், தலைமைத்துவம், தொழில் நுட்பப் பயிற்சி ஆகிய திறன்களைப் பெற்ற பெண்களைப் பாத்திரங்களாக்கி இலக்கியங்கள் வெளிவர வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஆழ்ந்து நோக்கும் பொழுது பால்ரீதியான பாரபட்சங்கள் கருத்துநிலை சம்பந்தமாகவே உள்ளது. ஆண்களின் மனவுலகில் பெண்மை பற்றிய அவர்களது கருத்துலகில் ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பால்ரீதியான பாகுபாடு நீங்குவது சாத்தியமில்லை.

பெண் விடுதலை என்பது, தனிப்பட்ட பெண்ணின் போராட்டத்தின் மூலமோ இயக்க செயற்பாடுகளின் மூலமோ பெறப்படுவதில்லை. சமூக மாற்றத்துடன் இணைந்தே பெண் விடுதலையும் பெறப்படும்.

இறுதியாக ஆரம்ப கால பெண்நிலைவாத அமைப்பு ஒன்று கூறிய வாசகத்தை நினைவு கூர்ந்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

"எமக்கு உண்பதற்கு உணவு
மாத்திரமல்ல
பூக்களும் தேவையாகும்"

**திருமதி விமலராணி வேலுதாசன்**
நூலகம்,
பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

*வீட்டுக்குள் இருந்த பெண்ணை விழிப்படையச் செய்தாய் கற்றுக்கொடுத்தாய் பல கைத்தொழில்கள் உன் விடா முயற்சி வெற்றிகள் பல கோடி.*

*மகளிர் அமைப்பென ஆரம்பித்தாய் வேலை வாய்ப்பும் அவருக்கு கொடுத்திட்டாய் பாவம் என சேர்த்திட்டாய் ஆண்களையும் அங்கத்தவராய் தன் நம்பிக்கையுடன் வென்று விட்டாய் பல கோடி.*

# இடர்மிகு காலத்தின் பதிவில் யாழ் அரசசார்பற்ற நிறுவனங்கள்


எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்து யாழ் மக்கள் அனுபவித்துள்ள துன்பங்கள் எண்ணிலடங்காதவை. தங்கள் துயர்மிகு உணர்வோடு திக்கற்று செய்வதறியாது திகைத்து நின்றார்கள். இவர்களின் உளமறிந்து, தேவையுணர்ந்து துணைநின்றவர்களில் அரசசார்பற்ற நிறுவனத்தினர் மிக முக்கியமானவர்கள். உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது மக்களுக்காக உழைக்க தயாராயின. அவர்களுக்கு துணையாக வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் நின்றன. தமிழ் மக்கள் என்ற உணர்வோடு அரச உத்தியோகஸ்தர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவையாளர்களும் இணைந்து உயிர்ப்போடு செயலாற்றினார்கள்.

தொண்ணூறு காலகட்டத்தில் நாம் பேரிடர்களை சந்தித்தும் ' எம்மைத் தொலைத்து விடாது ' பாதுகாத்துக்கொண்டோம். இக் காலகட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு மிக முக்கியமானது. மக்கள் அவர்களை நிச்சயம் மறக்கமாட்டார்கள். இக்காலத்தில் தங்கள் உயிர்களைக் கொடுத்து சேவைபுரிந்த சேவையாளர்கள் பலர். அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து ஒரு குடும்பமாக செயலாற்றின. இதன் விளைவாக அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் உருவாயிற்று. புரிந்துணர்வும், விட்டுக் கொடுப்பும், நட்புரிமையான செயற்பாடும் இவர்களின் தாரக மந்திரமாயிற்று.

இக் காலத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு என தனது சேவையை விரிவுபடுத்தி யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு சேவையாற்றியது. 1982 தொடக்கம் பல்வேறு வகையான செயற்பாடுகளை முன்னெடுத்து செயற்படுத்தி வருகின்றது. போர் தந்த பயனான விதைவைகளின் மறுவாழ்வில் அதிகம் அக்கறையோடு செயலாற்றும் நிறுவனமாக ஆரம்பம் தொடக்கம் இருந்து வருகிறது. இடம்பெயர்ந்த மக்களின் தரமான வாழ்வுக்காக தன்னாலான பணிகள் அனைத்தையும் இந்நிறுவனம் செய்து வருகிறது. அதாவது இடம் பெயர்ந்தோருக்கான குடியிருப்புக்கள் அமைத்தல், மலசலகூட வசதி நீர் வசதி, ஏற்படுத்தல், அத்தியாவசியப் பொருட்கள் வழங்கல், சுயதொழில் கடன் உதவி வழங்கல் எனத் தனது செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி வருகிறது. நாம் எமது மண்ணில் தன்னிறைவோடு வாழவேண்டும் என்ற துடிப்போடு விவசாய ஊக்குவிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளது. இக்கட்டான காலகட்டங்களில் உள்ளீடுகள் விநியோகம், விதைபொருட்கள் வி நி யோ க ம், விவசாய உபகரணங்கள் விநியோகம், விவசாய கடனுதவி எனத் தனது பன்முகத் திட்டத்தை பேராசான் கா. சிவத்தம்பி தலைமையில் இன்று வரை நடைமுறைப்படுத்தி வருகின்றது. " காலத்தின் தேவையறிந்து உதவுதல் எம் பணி " இப்பணியில் இன்று இளைஞர்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு பயிற்சிகள் ( தட்டச்சு, சுருக்கெழுத்து, தட்டச்சு இயந்திரம் திருத்தல், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தல், தையல் இயந்திரம் திருத்தல், உடையமைத்தல், வயரிங் – றீவைண்டிங், கொம்பியூட்டர் ) சிறார்களினதும் மாணவர்களினதும் கல்வி ஊக்குவிப்பு போன்ற பணிகளை பிரதானப்படுத்தி செய்து வருகின்றது.

இடர்மிகுந்த காலகட்டத்தில் எம்மோடு இணைந்து செயற்பட்டு வருகின்ற அரச சார்பற்ற நிறுவனக் குடும்பத்தின் ஓர் அங் கத்தவனான சமூக அபிவிருத்தி மன் றத்தின் சேவையை அதன் 20 ஆண்டுகால பூர்த்தி விழாவின்போது மனதார பாராட் டாமல் இருக்கமுடியாது. இதன் பல்வகைச் செயற்பாடும், சேவையாளர்களின் தன்னல மற்ற சேவையும் என்றும் போற்றுதற்குரி யது. ஒரு உள்ளூர் அரசசார்பற்ற நிறுவன மாக இருந்துகொண்டு தன்னாற்றலுக்கு மீறியதாக செயற்பாடுகளான தொழில் பயிற்சி, கலாச்சார ஊக்குவிப்பு, மது ஒழிப்பு, சுய தொழில் முயற்சித்திட்டம், வளர்ந்தோர் கல்வி, விதவைகளின் மறு வாழ்வு, இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வு போன்றவற்றை சீரான முறையில் வெற்றி கரமாக நடைமுறைப்படுத்திவரும் இந்நிறு வனத்தை வாழ்த்துவதில் நாம் பெருமை யடைகிறோம். “சமூக அபிவிருத்தி மன்றம்” மேலும் பல காலம் துடிப்போடு இயங்குமென்று நம்புகிறோம்.

**அ. நல்லதம்பி**
உப தலைவர்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்



***நாட்டு நிலமையால் உன்பெயரில் மாற்றம் செய்தாய் உன் ஆணித்தரமான கொள்கையை மாற்றவில்லை இடம் பெயர்ந்தோம் மக்கள் நாம் எங்களுடன் கூட வந்து ‘குழு மியனில்’ கைகொடுத்தாய் மறக்கமாட்டோம் மலர்க நீ பல கோடி.***

## 10 வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும்
## யாழ் சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு
# எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

எமது சேவைகள்

| | |
|---|---|
| சாதாரண சேமிப்பு | சாதாரண கடன் |
| நிரந்தர வைப்பு | சுயமுயற்சிக் கடன் |
| மாணவர் சேமிப்பு | உற்பத்தி முயற்சிக் கடன் |
| பரிசூதிய சேமிப்பு | விதவைகள் கடன் |
| மரண சகாய நிதித்திட்டம் | உயர்கல்விக் கடன் |
| | மிகவறிய மக்கள் கடன் |
| | குறுங்காலக் கடன் |
| | விவசாயக் கடன் |
| | அபிவிருத்திக் கடன் |
| | இளைஞர் கடன் |
| | திட்டக் கடன் |
| | விழாக் கடன் |
| | வியாபாரக் கடன் |

" குறைந்த வட்டி நிறைந்த சேவை "

இது ஒரு தானம் வழங்கும் அமைப்பும் அல்ல, இலாப மீட்டும் அமைப்பும் அல்ல, ஒரு சேவை அமைப்பாகும்.

எமது பணம் எம்மவர்க்கே உதவிட உங்கள் கிராமங்களிலுள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களையே நாடுங்கள்.

**யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு**
**கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

( வரையறுக்கப்பட்டது )
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
( தற்காலிகம் )

# TEN YEAR ANNIVERSARY

## *Message*

SCF Sends the Social Development Foundation Congratulations for Providing Excellent Community Service in Last Ten Years and Wishes it Every Best Wish for All its Future Work.

From : LIBBY KENNARD
**District Co-ordinator of**
**Save the Children**
**Jaffna District**
**04.09.1998**

சமூக அபிவிருத்தி மன்றத்தின்
10வது ஆண்டு நிறைவு
விழாவினை ஒட்டி அளிக்கப்பட்ட

# வாழ்த்துச் செய்தி

சமூக அபிவிருத்தி மன்றம் இன்று தனது 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவை மிகச்சிறப்பாக கொண்டாடிக் கொண்டு இருக்கும் இவ்வேளையில், ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை விவசாயிகளுக்கு அரும்பெரும் சேவையை ஆற்றி வருகிறது. வருடம் முழுவதும் விவசாயிகளுக்கு பணம் கடன் வழங்குவதுடன், தேவையான விதை தானியங்கள், எரிபொருள் கிருமிநாசினிகள், உரவகைகள், நீர் இறைக்கும் யந்திரம், தெளிகருவிகள் உள்ளூரிலும், வெளி நாடுகளிலும் பெற்று வழங்கிவருகிறது. இதனால் பல ஆயிரக்கணக்கான விவசாய குடும்பங்கள் வாழ்வதுடன் நாடும் பொருளாதாரத்தில் முன்னேறிச் செல்கிறது என்பது மிகையாகாது.

ஆகவே இன்று அல்லல்பட்டு வாழும் வடக்கு கிழக்கு விவசாயிகள் முன்னேறிச் செல்வதற்கு அரசும், வெளிநாட்டு நிறுவனங்களும் கைகொடுத்து உதவுமாறு வேண்டுகிறோம்.

வாழ்க வாழ்க என்று வாழ்துகிறோம்.

சி. பொ. வ. மா. க முதலியார்
உபதலைவர்
ச. அ. மன்றம்

# JEISHEBA AGENCY

GENERAL HARDWARE MERCHANTS

## ஜெசிபா ஏஜென்சி

*Agent For* :

S - Lon Lanka ( Pvt ) Ltd.

CIC Paints Ltd.

Kesewatta Marketing Services (Pvt) Ltd.

132, Stanley Road, Jaffna. Tel: 021-2407

## கோல்டன் ரி. வி. ரேட் சென்ரர்

2A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

*Dealers in* :

Fancy Goods

Plastic Gibs

Silver

Radio and T. V.

Aluminium and Etc.

யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் பத்தாவது ஆண்டு
நிறைவினை வாழ்த்துகிறோம்.

சிறந்த தெரிவு !    நிதான விலை !!

# ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

13, 14, பெரியகடை,    யாழ்ப்பாணம்.

மங்கள வைபவங்களுக்கேற்ற

*பட்டுப் புடவைகள்*

உள்நாட்டு — வெளிநாட்டு

சாறி வகைகள், பிளவுஸ் துணிகள் பஞ்சாபி சூட், ஸ்கேட் & பிளவுஸ்

ஆடவர்களுக்கேற்ப

**சேட்டிங் — சூட்டிங், றெடிமேட் ஆடைகள்**

தெரிவு செய்ய சிறந்த ஸ்தாபனம்

# G. S. Linganathan & Co

13, 14. Grand Bazaar,    Jaffna    T. P. 24214.

---

வாழ்த்துகிறோம்

# MAXAAL HOUSE

## மக்ஷல் கவுஸ்

**20 யுபிலி பஜார்
யாழ்ப்பாணம்**

உங்கள் புகைப்படங்களை தத்துவமாக
பிரதியாக்கம் செய்யும்
அங்கிகரிக்கப்பட்ட முகவர்

M/s. Photo Crome Pvt Ltd, Colombo
M/s. Ninehearts Colour Lab Colombo

யாழ் சமூக அபிவிருத்தி மன்றத்தின்
பத்தாவது ஆண்டு நிறைவினை
வாழ்த்துகிறோம்

# ERIC GANESH OPTICIANS

566, Hospital Road,
Jaffna.

## எரிக் கணேஷ்

566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Tele : 23702

எமது நல் வாழ்த்துக்கள்

அழகுக்கு அழகு செய்யும் நவீன அழகிய
கலை நயம்மிக்க தங்க வைர நகைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்

# ஆசைப்பிள்ளை அன் சன்

## நகைத் தொழிலகம்

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் 22 கரட் தங்க வைர
நகைகளைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

ஆசைப்பிள்ளை அன் சன் நகைத் தொழிலகம்
திருமகள் வாசம்,
நிகரை வீதி, சங்கானை.

- For Beautification of Beauties
- Depend on most Modern Gold and Diamond Ornaments
- From the most Popular Jewllers

*To Visit:* ASSAIPPILLAI & SON JEWELLERY WORKSHOP
" THIRUMAGAL VASAM "
NIKARAI LANE, CHANKANAI

பத்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடும் சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள்.

# பெஷன் ஹவுஸ்

65, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

எம்மிடம்

அலுமினியம் - எவர்சில்வர் பாத்திரங்கள்
அழகுசாதனப் பொருட்கள் சிறுவர் சைக்கில்கள்
தற்கால நாகரிகத்திற்கேற்ற வகையில் தயாரிக்கப்பெற்ற
நாகரீக விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள்
யாவும் நிதான விலையில் கிடைக்கும்.

# FASHION HOUSE

65, K. K. S. Road, Jaffna.

தொலைபேசி 23046

10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள்.

ஓ

சகல விதமான பெயின்ற் வகைகளையும் பெற
நாட வேண்டிய இடம்

ஓ

# சிற்றி காட்வெயர்

245, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.



பணியாளர்கள் 1996 ஆம் ஆண்டு



பணிப்பாளர்களும், பணியாளர்களும்
1993 – 1994

*வாழ்த்துகிறோம்*

## சாயி வீடியோ, ஓடியோ அன் ஸ்ருடியோ

வீடியோப்படப்பிடிப்பு, பாடல் பதிவு, உள்புற வெளிப்புற
புகைப்படப்பிடிப்புக்கும் மணப்பந்தல்கள், மணவறை,
கதிரைகள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும்

## சாயி வீடியோ அன் ஸ்ருடியோ

புஸ் நிலையம்
அச்சுவேலி

29, றக்கா றோட்
யாழ்ப்பாணம்

## SAIE VIDEO, AUDIO & STUDIO

QUALITY VIDEO FILMING AUDIO
RECORDING, PHOTOGRAPHY

**Bus Stand**
**Atchuvely**

**29, Racca Road**
**Jaffna.**

---

*வாழ்த்துகிறோம்*

எங்களிடம்

போட்டோ கொப்பி
பாக்ஸ்
விமான பயண ரிக்கட் ஒழுங்குகள்
தட்டெழுத்து (ஆங்கிலம், தமிழ்)
போட்டோ வகைகள் சான்றிதழ்கள் கவரிடுதல்
மற்றும் இந்தியா, சிங்கப்பூர், பாங்கொக், மாலைதிவு,
ரஷ்யா, உக்கிரயன் ஆகிய நாடுகளுக்கான பயண
ஒழுங்குகளும் செய்து தரப்படும்

வெளிநாட்டு, உள்நாட்டு தொலைத்தொடர்பு வசதியையும்
உங்களுக்கு மிக விரைவில் வழங்கவுள்ளோம்.

## ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

**கந்தசாமி கோவில் வடக்கு வீதி, நீர்வேலி தெற்கு.**

பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு
நல் வாழ்த்துக்கள்

# றூபா பன்முக வர்த்தகம்

இல. 104, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**விநியோகஸ்தர்கள் :**

Smithkline Beechams / Mackwoods Ltd.
Delmege Forsyth Ltd.
Gamma Parmace Auticaes (Private) Ltd.
Hemas Marketing Ltd.
Ceylon Biscuits Ltd.

**எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.**

பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்,
சமூக அபிவிருத்தி மன்றத்தினருக்கு எமது வாழ்த்துகள்

**நீர் இறைக்கும் இயந்திரமும், உதிரிப் பாகங்களும்,
இறக்குமதியாளரும், விற்பனையாளரும்.**

# ஆனந் மோட்டோர்ஸ் ஸ்ரோஸ்

இல. 177, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

0 1 - 2336

பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள்

மொட்டார் சைக்கிள் — உதிரிப்பாகங்கள்
ரேடியோ, ரி. வி. டெக். மணிக்கூட்டு வகைகள்,

மலிவு விலைக்குப் பெற்றுக்கொள்ள

# கஜெமுகன் ரேட் சென்ரர்

*யாழ்ப்பாணம்.*

---

பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள்.

- உலர் உணவுப் பொருட்கள்
- சகல விதமான விவசாய சம்பந்தமான கிருமிநாசினி வகைகள்.
- பென்சி பொருட்கள்,
- பாடசாலை உபகரணங்கள்.

யாவிற்கும் நாடுங்கள்.

# பவாணி ஸ்ரோஸ்

நீர்வேலி

யாழ் சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள்

உறுதியும் உத்தரவாதமும் உள்ள
தங்க வைர நகைகளைப் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு குறித்த
தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

## சாரங்கா நகை மாடம்

தங்க வைர நகை வியாபாரம்
177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம் ; ☎ 24339

## அருள் முருகன் நகை அகம்

96/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்:

## சிவா நகை மாடம்

யாழ் வீதி, சாவகச்சேரி.

---

10வது ஆண்டு நிறைவு விழாவினை சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும், யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் செயற்பாடுகள் மென்மேலும் வளர்ச்சியடைந்து சிறப்பிக்க எமது வாழ்த்துக்கள்.

தரமான பனைவெல்லம், பனஞ்சீனி, கல்லாக்காரம், மற்றும் பனைசார், தென்னைசார் உற்பத்திப் பொருட்களை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு இடம்

## கற்பகம் பல்பொருள் விற்பனை நிலையம்

## ( அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் )

பஸ் நிலையம் அச்சுவேலி

---

வாழ்த்துக்கள்

சகல விதமான அச்சக வேலைகளையும் குறித்த தவணையில் நிதானமான செலவில் செய்வித்துக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய அச்சகம்

## SREE VIKNESWARA PRINTERS

## ஸ்ரீ விக்னேஸ்வரா அச்சகம்

150, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

150, Navalar Road,
Jaffna



இணைப்பதிகாரியுடன் பணியாளர்கள்



1998ஆம் ஆண்டு பணிப்பாளர் சபையினரின் ஒரு பகுதி

# தனது பத்தாவது வருட சேவையில்

சமூக அபிவிருத்தி மன்றம் தனது பத்தாவது வருட சேவையில் பூரித்து நிற்கின்ற இவ்வேளையில் அது கடந்து வந்த பாதையில் ஆற்றிய சாதனைகளை நினைவு கூருதல் நன்றியுணர்வுடன் கூடிய ஒரு கடமையாகும் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களுடைய வாழ்க்கை அவலம் நிறைந்ததாக தொடர்ந்து வருகிறது. இந்த அவல வாழ்க்கையினூடாக நாம் கழித்துவரும் ஒவ்வொருகணமும் எமது வாழ்க்கையில் பல திருப்பங்களையும் தாக்கங்களையும் கொடுக்கும் ஒன்றாகவே இருந்து வருகிறது அடுத்த கனம் எவ்வாறு அமையும் என்ற ஒரு ஏக்கநிலை. ஆம் அடுத்தகணம் உயிர் போகலாம், ஊனமாகலாம், விதவைகளாகலாம், அநாதைகளாகலாம். இவ்வாறான பேரிடர்கள் சூழ்ந்த காலச் சூழலில் தான் சமூக அபிவிருத்தி மன்றம் என்ற குழந்தையும் யாழ் மண்ணில் பிறந்தது.

அது புரண்டு, தவழ்ந்து, நடந்து வளர்வதற்குரிய தளம் கடினமானதாகவும், கரடுமுரடானதாகவும் இருந்தது. என்றாலும் கூட காலம் அறிந்து கைகொடுக்கும் பணி ஞாலத்திலும் விடப்பெரியது என்ற பொன்மொழிக்கு அமைவாக சமூக அபிவிருத்தி மன்றத்தின் சேவையும் யாழ்ப்பாணத்தில் இப்பேரிடர் கால வரலாற்றில் ஏதோ ஒரு நூல் இழையாகவேனும் பின்னிப் பிணைந்து நினைவுகூரப்படும் என்பதனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

பெண்ணடிமை திருமட்டும் பேசுந்திரு
நொம்பின்
மண்ணடிமை திருதல் முயற்சொம்பே

என்று பாடியபாவலனின் உள்ளக் குமுறலுக்கு உயிர்கொடுப்பது போன்று மகளிர் தம் இன்னல்களையும் துயரங்களையும் களைவதில் சமூக அபிவிருத்தி மன்றத்தின் பங்கும் புறம்பாக நோக்கப்படவேண்டிய ஒன்றாகும். அடுப்பூதும் பெண்மை அலுவலகமும் செய்யவேண்டும், நிலம் பார்த்து நடந்தவன் நீதிக்காகவும் குரல் கொடுக்க வேண்டும், விட்டுக்குள் அடங்கிக் கிடந்தவன் வெளியேவந்து வீசுகின்ற தென்றலையும், வெளிச்சத்தையும் அனுபவிக்கவேண்டும் '' தற்காத்து தற்கொண்டாற்பேணி, தகைசான்ற சொற்காத்து '' மேற்படி இலட்சியங்களும் நிறைந்த சோர்விலாத தமிழ் பெண்ணாகி அவள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் இதுதான் சமூக அபிவிருத்தி மன்றத்தின் மகளிர் தொடர்பான நிலைப்பாடாகவும், செயற்பாடாகவும் இருந்தது.

இந்தக் குறிக்கோள்களை வென்றெடுக்க சமூகத்தின் அடிமட்டத்தினைத் தொட வேண்டும், கிராம மட்டத்திற்கு ஊடுருவிச் சென்று கிளைகளை அமைக்கவேண்டும் என்ற நோக்கில் கிராமந்தோறும் சென்று கிளைகளை அமைத்து மகளிருக்கான அபிவிருத்தித் திட்டங்களை சமூக அபிவிருத்தி மன்றம் செயல் வடிவமாக்கியது.

''சிறுகச்சேமி பெருகவாழ்'' என்ற நோக்கில் மகளிர் மத்தியில் சேமிப்பு பழக்கங்களை உருவாக்கி வீட்டுக்கொரு சுய தொழிலை முயற்சியை ஏற்படுத்தும் பணியில் மகளிர் தம் நம்பிக்கையையும், மனஉறுதியையும் வளர்த்தெடுத்தது சமூக அபிவிருத்தி மன்றம் இந்தவகையில் குடும்பத்தலைவர்களையும் தலைவியரையும் ஒருங்கே அங்கத்தவராக்கி கொண்டமை மன்றத்தின் பணிகளில் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

விடுதலைகளுக்கான அபிவிருத்தித் திட்டம், அநாதைக் குழந்தைகளுக்கான கல்வி ஊக்குவிப்புத்திட்டம், விவசாயக்குடும்பத்தை சார்ந்த மகளிருக்கு நீர் இறைக்கும் இயந்திரம், நாற்றுக்கள், தொழிலுக்கான உபகரணங்கள், எண்ணெய் விநியோகம்

எனப் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை மன்றம் நடைமுறைப்படுத்திய அதேவேளை யில் கிராமரீதியாக அமைக்கப்பட்ட இம் மன்றத்தின் கிளைக்கழகங்களின் ஊடாக தலைமைத்துவ, போசாக்கு, சுகாதாரம், தாய் சேய் நலன், சார்ந்த பல பயிற்சி நெறி களையும் கருத்தரங்குகளையும் மகளிர் பெறக்கூடிய வாய்ப்பினை மன்றம் தனது செயற்திட்டங்களினூடாக ஏற்படுத்திக் கொடுத்தது.

இவைமட்டுமன்றி மகளிருக்கான சுய தொழில் திட்டத்தின் கீழ் ஆடுவளர்ப்பு, கோழிவளர்ப்பு, மாடுவளர்ப்பு வீட்டுத் தோட்ட முயற்சிகள் இவைகளுக்கான கடன் திட்டங்களையும் கருத்தரங்குகளையும் ஆலோசனைச் சேவைகளையும் செயற்படுத் தியதுடன் நவயுக மகளிருக்கு பொருந்தக் கூடிய வகையில் தட்டச்சுப் பயிற்சி நெறி, ஆங்கில மொழிப்பயிற்சி, மனைப்பொரு ளியற்பயிற்சி நெறிகள் என்பவற்றைச் செயற்படுத்தியதிலும் மன்றத்தின் பணி மகத்தானதாக இருந்தது. இருந்துவருகிறது.

குறிப்பாக இம்மன்றத்தின் வெளிக்களக மட்ட உத்தியோகத்தர்கள் மகளிர்தம் நல நடவடிக்கைகளுக்காக கிராமரீதியாகச் சென்று அங்கத்தவர்கள், அங்கத்தவர்களில் லாதவர்களினது குறைபாடுகளை ஆராய்ந்து தலைமையகத்துக்கு முன்மொழிந்து அவற்கு ஏற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்து வதில் ஒவ்வொருமாதமும் ஆலோசனைக் கூட்டங்களை நடாத்துவது போற்றுதற் குரியன வாகும்.

இழப்புக்களும் சேதங்களும் தான் எமது சமூகத்தின் வரலாறில்கொண்டிருக்கும் இவ் வேளையில் சமூக அபிவிருத்தி மன்றமானது மகளிர் நல நடவடிக்கைகளுக்காக ஆற்ற வேண்டிய திட்டங்களும், பணிகளும் இன்னும் பல உள்ளன. சீதனக்கொடுமையின் தாக்கங் கள், திருமணவயதை எட்டியும் மணமாகாது தவிக்கும் உள்ளங்கள் உடல் ரிதியாகவும், உளரீதியாகவும் ஊனமுற்றுவாடும் மகளிர் கள், கணவனை இழந்து விதவைகளாக்கப் பட்டோம், அநாதைகளாகி நிற்கும் சிறுவர் சிறுமிகள், கல்விவசதி ஊட்டப்படாத பிஞ்சுகள், போசாக்கின்றி நலிவுறும் தாய் மார், சேய்கள், அந்நியகாலச் சூழல்களினால் ஆக்கிரமிக்கப்பட்டு சீரழிந்து நிற்கும் நங் கையர் ஒரு ஆரோக்கியமான சமுதாயத் தைக் கட்டி எழுப்புகையில் இவர்களுக்கான திட்டங்களை திட்ட செயற்படுத்த அதன் ஊடாக தன் இலட்சியங்களை அடைந்து கொள்ள சமூக அபிவிருத்தி மன்றமானது இப்பத்தாவது ஆண்டு நிறைவில் ஓரளவுக்கு அதற்கான வரவையும் அடித்தளத்தையும் ஏற்படுத்தியுள்ளமையை நாம் எல்லோரும் பெருமையுடன் நினைவு கூறவேண்டும்.

மன்றத்தின் பணி எதிர்காலத்தில் மென்மேலும் வளர்ச்சியடைய வரவடைய நம் கரங்கள் ஒன்றாக இணையட்டும் என்று இறையருள் வேண்டி, இப் 10 வது ஆண்டு ஓர் அபிவிருத்தி ஆண்டாகவும், மக்கள் நலன்காக்கும் ஆண்டாகவும் திகழவேண்டும் என்று போற்றி விடை பெறுகிறேன்.

**திருமதி. ஜெகதீசன்**
விழாக்குழுத்தலைவி
சமூக அபிவிருத்திமன்றம்

# லங்கா ஜாதிக
# சர்வோதய சிரமதான சங்கமய

மகாத்மா காந்தி அடிகளின் அகிம்சைத் தத்துவங்களின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்ட இவ் இயக்கம் அன்பு, கருணை, மகிழ்ச்சி, பொறுமை, சகிப்புத்தன்மை ஆகிய உயரிய பண்புகளை மக்களிடையே பரப்பி கிராம சுய இராட்சியம் என்னும் இலக்கை நோக்கி தனது வேலைத் திட்டங்களை இலங்கையில் செயற்படுத்துகின்ற சர்வோதய சிரமதான இயக்கம், நாற்பது வருட மக்கள் சேவையைப் பூர்த்தியாக்கி உள்ளது. 1958 ஆம் ஆண்டு கலாநிதி ஏ. ரி. ஆரியரட்ணா அவர்கள் வறிய மக்களின் துயர் துடைப்பதற்காக, சிரமதான முறையில் மக்களின் பங்கேற்போடு குருநாகல் மாவட்டத்தில் ''கணத்தொழுவ'' என்ற கிராமத்தில் முதன் முதலாக வறிய மக்களுக்கு தன்னுடைய சேவையை ஆரம்பித்தார்.

சர்வோதய இயக்கம் மனிதனுக்குத் தேவையான 10 அடிப்படை வசதிகளான சுற்றாடல், நீர், உடை, உணவு, வீடு, சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, கலாச்சாரம், எரிபொருள் என்பனவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான நோக்கையும், அவற்றை செயற்படுத்தலும், பெறும் பலனை மதிப்பிட்டு உரிய தலைமையை திட்டமிடலும் இதன் தலையாய கடமையாக கொண்டுள்ளது.

**மாவட்ட நிலையம், சர்வோதயம்**
இல. 3, பிளச்சர்ஸ் லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

# மனமுவந்த வாழ்த்துக்கள்

வாழ்த்தவோ பலவுண்டு
வார்த்தைகளோ வரவில்லை – ஆனாலும்
வாழ்த்துகின்றோம் யாம்
பத்தாண்டு சேவைதனை – கடந்து
பல்லாண்டுகள் இம்
மண்ணில் வாழும்
மக்களின் நிலையறிந்து
மன்றம் சேவையாற்றிட
மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

க. அருள்நேசன்

சமூக அபிவிருத்தி மன்றத்தின் பணி
மென்மேலும் சிறக்க எமது வாழ்த்துக்கள்

**சகல விதமான கட்டடப் பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட**

**நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்**

▼
▼
▼

*கல்கிசன்ஸ்*

**147**, *ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்*

## *நன்றி நவில்கின்றோம்...*

எமது பத்தாவது ஆண்டு மலருக்கு ஆசிச் செய்திகள் வழங்கியோருக்கும், விளம்பரங்கள் தந்து உதவியவர்களுக்கும், இம் மலரை வெளியிடுவதற்கு பல வழிகளில் உதவி புரிந்தோர்க்கும், குறுகிய காலத்தில் அச்சிட்டு தந்த யாழ் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தாருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். சமூக அபிவிருத்தி மன்றம்**

*வாழ்த்துகிறோம்*

**22, கரட் தங்க நகைகள் ஒடருக்கு உத்தரவாதத்துடன்**
செய்து கொடுக்கப்படும்
உங்கள் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

## பிருந்தா நகை மாடம்

*301, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

---

*வாழ்த்துகிறோம்*

சில்வர் பித்தளை அலுமினியம்
பிளாஸ்டிக் வகைகளுக்கு நாடுங்கள்

## சில்வர் லைன்ஸ்

*198, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

---

*வாழ்த்துகிறோம்*

தரமான புடவைவகைகளுக்கு
நாடுங்கள்

## திருப்பதி ஆடையகம்
## THIRUPPATHY TEXTILES

*33, நவீன சந்தை,*
*யாழ்ப்பாணம்.*

---

*வாழ்த்துகிறோம்*

இதயங்கனிந்த எமது வாழ்த்துக்கள்

## ஸ்ரீ வேலும் மயிலும்ஸ்

**பான்ஸி குட்ஸ்**

அன்பளிப்புப் பொருட்கள் சூட்கேஸ், ரவலிங் பாக் வகைகள்,
கோல்ட் கவறிங் எவர்சில்வர், பிளாஸ்ரிக், அலுமியப் பாத்திரங்கள்,
மற்றும் அனைத்துப் பொருட்களும் பெற்றுக்கொள்ளலாம்.

**இல. 54, நியூமார்க்கட் உட்புறம், யாழ்ப்பாணம்.**



உபதலைவரும் பணியாளர்களும்

கடிதங்கள் பல அமைத்து கருத்துடனே செயலாற்றி சிந்தனையை தூண்டி எமை சேமிக்க வைத்து. கடன்கள் பல தந்து எம் காலில் நாம் நிற்க எமை எல்லாம் ஊக்குவித்து கட்டம் கட்டமாய் கடன் அடைத்து வருமானம் மேலோங்க வளமாக வழிகாட்டி மகளிர் தலைமைத்துவம், பாலர் முன் பள்ளி பயிற்சி வகுப்புக்கள் பல வைத்து விவசாய ஊக்குவிப் பிற்கு வலுவான சேவை செய்தாய்.

*நின் சேவை மேலும் வளர,*
*அனைத்து கிளைக்கழகங்கள் வாழ்த்துகின்றோம்*

**மனதார வாழ்க மன்றம் வளர்க நின் சேவை**

# தலைமைத்துவம் — சமூக உளவியல் நோக்கு

## Leadership — Socio - Psychological review

சமகால உலகிற்கு தலைமைத்துவம் குறித்தாய நோக்கல் இன்றியமையாயத் தேவையாக அமைகின்றது. பல்துறையில் தேசவிருத்தியை வேண்டிநிற்கும் மானிடத்திற்கு தலைமைத்துவம் குறித்த ஆய்வுகளும் அதன்சிறப்பான வளர்ச்சி நிலைகளும் அத்தியாவசியமான தொன்றாகிறது. உலகநாடுகள் குறிப்பாக முதலாளித்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படும் நாடுகள் தலைமைத்துவப் பண்புகளை தனிநபர்களிடையே வளர்த்தெடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. தனிநபர் தலைமைத்துவ வளர்ச்சிக்கான அந்த முயற்சிகள் குறித்து முதலாளித்துவ நாடுகளுக்கும், பொதுவுடமை நாடுகளுக்கு மிடையில் கருத்து வேறுபாடுகள் நிலவுகிறதாயினும் தலைமைத்துவப் பண்புகளில் நேர்கணிய வளர்ச்சி நிலைகள் நாட்டு நலனுக்கு மட்டுமல்ல விட்டுநலனுக்கும் அவசியமான தொன்றாதலால் தலைமத்துவம் பற்றியதும் அதன் வகையீகடுகள் பற்றியதுமான நோக்கல் பொருத்தமான தொன்றாகும்.

தலைவர்கள் பிறப்பதில்லை தலைவர்கள் உருவாக்கப்படுகிறார்கள் என்கிற கருத்து நிலை ஓங்கியே காணப்பெறினும், சிலபரம்பரை சார் கூவடுகள் தலைமைத்துவ தகைமைகளுக்கு உயிர்ப்பினை உருவாக்குகின்றன என்கிற நிலைப்பாட்டினையும் நிராகரித்துவிடமுடியாது. இக்கட்டுரையின் வளர்ச்சி நிலையில் குறித்த கருத்துக்கான ஆதாரங்களையும் கண்டுகொள்ளலாம்.

1896ம் ஆண்டிற்கு முன் தலைமைத்துவம் என்கிற சொற்பிரயோகம் வர விருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், தனி நபர்கள் தங்களது சக்திகளைப் பயன்படுத்தும் விதத்தில் காட்டிநிற்கும் வேறுபட்ட நிலைகள் நிலைக்கான காரணிகளே இந்த தலைமைத்துவப் பண்புகள் என்றவாறாக கான்முஷியஸ் தொட்டு பேட்டன்ரசல் வரையில் பேசப்பட்டுவந்தது. (1) முதலாம் உலகப் போரின் விளைவாக சமூக உளவியல், சமூகவியல் போன்ற பாடவிதானங்கள் தலைமை, தலைமைத்துவம் குறித்து விஞ்ஞான விளக்கத்துடன் அறிந்து கொள்ள ஆர்வம் கொண்டன.

நிறைவானதும், சுருக்கமானதுமான வரைவிலக்கணமொன்றினைத் தலைமைத்துவம் குறித்து தருதல் சிரமமானது. காலத்துக்கு காலம், தலைமைத்துவப் பண்புகளின் வெவ்வேறான அலகுகளை முதன்மைப் படுத்தி வரைவிலக்கணங்கள் தரப்பட்ட நிலையினால் அது குறித்து எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய வரவிலக்கணத்தை தருதல் சிரமமாகிறது. எடுத்துக்காட்டாக தலைமைத்துவத்தில் ''தூய்மைத்தன்மை'' மிக முக்கியமான கூறாக எடுத்துச் சொல்லப்படுகிறதாயினும் இன்னும் பில்கிளிங்டனை அமெரிக்க மக்கள் தமது நேசத்து ஜனாதிபதியாக தொடர்ந்தும் ஒற்றுக் கொண்டிருக்கிறார்கள். தலைமைத்துவத்தையும் தனிப்பட்டவாழ்க்கையையும் வெவ்வேறானவை என ஏற்றுக் கொள்ள அமெரிக்க மக்கள் தலைப்பட்டு விட்டார்கள் என்பதனையே இந்நிலை எடுத்துக்காட்டுகிறது. தலைமைத்துவம் குறித்துக் கூறப்பட்ட சில வரைவிலக்கணங்களை இங்கு தருதல் பொருத்தமானதாகும் ''எவரேனும் ஒருவர் ஏனையோருக்கு முன்மாதிரியாக நின்று செயல்படுகின்றாரோ அந்த நபரை தலைவர் அல்லது அந்த நிலையை தலைமை எனலாம்''. (2) என ஸ்புறாட்டஸ் குறிப்பிடுகின்றார். இந்த எளிய வரைவிலக்கணத்தின் வழியாக தலைமைத்துவம் என்பது ஒருவரிடம் குவிந்துள்ள சிறப்புக் குணவியல்புத் தொகுதி என்றும், இந்த குணவியல்புத் தொகுதியானது அத்தலைமைத்துவத்தைப் பின்பற்றுபவர்களுக்கு முன்மாதிரியாக அமைகின்றது என்றும் குறிப்பிடலாம். மோரீவின் இ. சோ, தலைமைத்துவம் குறித்துக்கூறுகையில் தலைவர் என்பவர்

தூய்மையானவர், சிக்கனமானவர் என்றும் தன்னைச்சார்ந்துள்ள மக்கட் கூட்டத்தின் மேல் (1) Gardner Lindzey Ellist Aronson The Hand book of Social Psychology Vol 4 Mohan Primalini Amerind Publication Pvt. Ltd. New Delhi 1969 P 205.
(2) W. J H. Sprotts Human Groups, Penguin Book 1969 P 69.

அல்லது குழுவின்மேல் நேர்கணிய செல்வாக்கைச் செலுத்தக் கூடியவராகவும் விளங்கவேண்டும் என்றார். இந்நிலை குழுவிலுள்ள தனியன் அல்லது முழுக்குழுவும் தலைவரை நோக்கிச் செலுத்துகின்ற செல்வாக்கைக் காட்டிலும் கூடுதலான செல்வாக்கை, தன் குழுவைச்சார்ந்த அனைவரிடத்தும் தலைவன் செலுத்தக் கூடிய செல்வாக்கு வலிமையையுடையவனாக அமையவேண்டும் என்பது இங்கு பெறப்படுகின்றது. எனவே தனி நபர் ஒருவரை தலைமைத்துவம் என்கிறநிலையில் அமர்த்துகின்றபோது அந்த நபர் தன்னை நிலைப்படுத்திய குருவினர் மீது செல்வாக்கைச் செலுதுத்பவர். அந்நிலைக்குத் தனிநபரை நிலைப்படுத்தியாகும் தனிநபரான தலைவர் நம்மை நோக்கி செல்வாக்குச் செலுத்துகின்ற பாங்கை ஏற்றுக்கொள்ளத்தக்க முறையிலே நம்மைத் தயார்படுத்திக் கொள்கின்றனர். எனவே தலைமைத்துவம் தலைவல் என்கிற நிலை ஏனையோரால் உண்மை இயல்புகள் குணவியல்புகள் என்று கருதப்பட்டவைகளைத் தன் உள்ளடக்கங்களாய் கொண்டு அமைகின்றது என்பதும், பதவிநிலை என்பதும், தலைமைக்கும் குழுவுக்கும், அல்லது வழிவருவோருக்கும் இடையிலான இடைவிடாத இடைவினையின் ( interaction ) பேறாகத் தலைமைத்துவம் உயிர்ப்பாய் உள்ளது என்பதும் பெறப்படுகிறது.

தலைமைத்துவம் ஒரு "தனியான்" செயற்பாடாகவும் "கூட்டுச்" செயல்பாடாகவும் அமையும் தன்மையது. தலைமைத்துவத்தை வேறுபட்ட பலவழிகள் வாயிலாக அடைந்து கொள்ளலாம். அலுவலகத்தின் தலைமையொன்றினை, அவ் அலுவலகத்தைச் சேர்ந்த பிற அலுவலர்கள் சேர்ந்து செயற்பட்டு உருவாக்கலாம். அதிகாரம் மிக்கவர்களால் தலைமைத்துவத்திற்கு தனியார் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டோர் நியமிக்கப் படலாம். தேர்தல்கள் மூலம் வாக்குப் பெற்று தலைமைத்துவத்தை அடையலாம். ஒருவரிடமிருந்து தலைமைத்துவத்தை வரன்முறைவழியாகப் பெறலாம், அபிமானமற்ற முறையில் எதேச்சையாகத் தலைமைத்துவத்தை அடையலாம். எவ்வாறு தலைவனானேன் என்று அறியாமலேயே எவ்வித (அதனை நோக்கிய) முயற்சியுமின்றி மிக இயல்பாகக் கூடத் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

(3) Henry Clay, Lind Gren, An introduction to Social Psychology, Willy Eastern Private Limited. New Delhi: 2974 P 380. மக்களை வலுக் கொண்டு அடக்கித் தலைமைத்துவத்தைக் கைப்பெற்றலாம்.

தலைமைத்துவத்தை ஏற்படுத்திக் கொடுத்தும், அதன் செயற்பாட்டிற்கு உதவியாகவும், உந்துசக்தியாகவும் அதன் பின்னணியில் அமைந்திருப்பவை மக்களின் அமைப்புக்களாகும். இவ்வித அமைப்பு அரசாங்கமாகவோ, அரச நிறுவனமாகவோ, சமய நிறுவனமாகவோ, சமூக நிறுவனமாகவோ, பிற சிறு குழுக்களாகவோ அமையலாம். இத்தகைய நிறுவனங்கள் மனிதர்கள் தங்களது வேறுபட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காகவே உருவாக்கிக் கொள்கிறார்கள். இத்தகைய நிறுவனங்கள் நீண்ட கால தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டாகவும், குறுங்காலத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டாகவும் என உருவாக்கம் பெறலாம்.

தலைமைத்துவ வகையீடுகளை, சில அடிப்படைகளை அடியொட்டி வகையிடலாம். தலைமைத்துவத்தின் தோற்றம் (Origin of Leadership) தலைமைத்துலத்தின் தேவை (Purpose of Leadership) தலைமைத்துவத்தின் இயல்பு (Nature of Leadership) தலைமைத்துவத்திற்கும் தலைமையைச் சார்ந்துள்ள குழுவிற்கும் இடையிலான தொடர்பு (Nature of the relation of the

Leader with the followers) மனித சமூக மானது தேவைகள் ஏற்படுகிறபோது, அவ சியம் ஏற்படுகிறபோது குழுக்களையும் அதற்கான தலைமைத்துவத்தையும் உருவாக்கிக் கொள்ளுகிற வேட்கைத் தாராண்மியத்தை இயல்பாகவே கொண் டுள்ளது. குழுவாகத் தம்மை இணைத்துக் கொள்ளுகிற மனிதவேட்கை இயல்பான தாயினும், குறித்த சமூகத்தை வழிநடத்து கிற அரசாங்கம் இத்தகைய உருவாக்கச் செயல்பாடுகளை ஊக்குவித்தும், கட்டுப் படுத்தியும் செயல்படுவதை அவதானிக்க முடியும் தலைமைத்துவத்தை அதிகாரத் தைப் பயன் படுத்துகிற பரவலாக்குகிற இயல்பினை யொட்டியும், செயல்படும் முறை களையும், செயல் படுத்துவதில் பின்பற்று கின்ற வழிவகைகளை ஒட்டியும், வழிவகுப வர்களுடன் கொள்ளுகின்ற தொடர்பின் வேறுபட்ட நிலைகளையொட்டியும் வேறு படுத்தலாம். (4) J A. C. Brown, The Social Psychology of industry, Nicholls & Company Ltd G. Bt 1954 P 241.

தலைமைத்துவம் அதிகாரத்தலைமைத் துவம் (Autocratic Leadership) சனநாயகத் தலைமைத்துவம் (Democratic Leadership) தான் தோன்றித் தலைமைத்துவம் (Laissez faire Leadership) என்றவாறாக வகைப் படுகிறது. (5) அதிகாரத்தலைமைத்துவம் மேலும் கடும்போக்குடைய அதிகாரத் தலைமைத்துவம் (Strict autocratic Leadership) மென்போக்குடைய அதிகாரத் தலைமைத்துவம் என வகைப்படுத்தப்படு கிறது. கடும்போக்குடைய அதிகாரத் தலைமைத்துவத்தில் தனிநப ரொருவரே சகல அதிகாரங்களையும் தன்வயப்படுத்தி யிருப்பார்.

தீர்மானங்கள் இங்கு எதேச்சையாகவே எடுக்கப்படும். நிதி நிர்வாகம், சட்டவாக் கம் போன்ற பிரதான ஆட்சி அலகுகள், சர்வாதிகார தலைமையின் விருப்பப்படியே செயல்படுத்தப்படும். தலைமைக்கு முரண் படுபவர்கள், கடுமையாகத் தண்டிக்கப்படு வார்கள், தலைமைக்கு உவப்பாகச் செயல் படுபவர்கள் பரிசில்கள் பதவிகள், பதவி உயர்வுகள் வழங்கிப் பாராட்டப்படுவார்கள் கடும்போக்குடைய அதிகாரத்தலைமைத் துவத்தில் வினைத்திறன் செயல்திறன், வெளியீடு சிறப்பாக அமையும். மென் போக்குடைய அதிகாரத்தலைமைத்துவம் நெகிழ்ச்சித் தன்மையுடையதாக காணப் பெறும். தலைமைத்துவம் இங்கு தன்வழி வருவோருக்கு நல்லதையே செய்யவேண்டும் என்கிற மனப்பாவத்துடன் செயல்படும். தன்னைச்சார்ந்த குழுவினரின் மனக்கிடக் கைகள் உணரப்பட்டு அதற்கு இயைபாகவே இங்கு செயல்பாடுகள் அமையும். மேலும் அதிகாரத் தலைமைத்துவமாக இருந்தா லென்ன, சனநாயகத்தலைமைத்துவமாக இருந்தாலென்ன அவைகளின் செயல்பாட் டிற்கு அதிகாரமே (Power) அடிப்படை யாக அமைகிறது. அதிகாரங்கள் அதிகாரத் தலைமைத்துவத்திற்கும், சனநாயகத் தலை மைத்துவத்திற்கும் பொதுவானவையே. அவற்றைக் கையாளுகின்ற, பிரயோகிக் கின்ற வரிவகையிலேயே தலைமைத்துவ வேறுபாடுகள், பாகுபாடுகள் உருவாகுகின் றன. 5. OP-Cit, J. A. C Brown 1954 p 226 சனநாயகத் தலைமைத்துவம் இயலுமான வரை தன்னைச்சார்ந்துள்ளோரது கருத்துக் களைக் கேட்டறிந்து சம்மதப் பாட்டினைக் கேட்டறிந்து அவர்களது மனப்போக்குக் களும் மனவொருமைப்பாடுகளும் தலை மைத்துவத்தின் செயல்பாடுகளில் பிரதி பலிக்கத்தக்க விதத்திலேயே செயல்பாடு களை அமைத்துக் கொள்ளும். சனநாயகத் தலைமைத்துவமானது முகவர் அமைப்புப் போல் விளங்கி மக்கள் வழங்கிய விஞ்ஞா பனத்தினை நிறைவேற்றும் நிலையமாகவே விளங்கும். சனநாயகத்தலைமைத்துவத்தில் தலைமை சரீர ரீதியாக பலகாலம் பிரசன் னம் கொடுக்காத நிலையிலும் நிருவாகம், செயல்பாடு கற்பிக்கப்பட்டது போல் கடப் பாட்டுணர்வுடன் நடைபெறும். சனநாய கத் தலைமைத்துவத்தில் வழிவருவோரால் தலைமையானது தலைவரானவர் எம்மில் வேறானவர் அல்லர். (Not an Outsider) என்கிற உணர்வு மேலோங்கி எங்களில் ஒருவர் (one of us) என்கிற உணர்வு பரிண மித்து இருக்குமாயினும் செயல்படும் திற

னால் எங்களை விடவும் உயர்ந்தவர் (best of us) என்கிற உணர்வு குருவினரிடையே அல்லது வரி வருவோரிடையே தலைமை மேலோங்கி நிற்கும். (6) David Krech, Richard Crutchfield, Egerton L. Ballachey, individual in Society Mcgrow-Hill Book Company. New York, 1962 p 434.

எத்தகைய தலைமையும் தலைமைத்துவமும் சர்வாதிகார சனநாயக தான்தோன்றித் தலைமைத்துவம் என்கின்ற வகையறவுக்குள் உள்ளடங்கு மாயின் தற்காலத்தில் நிர்வாக இலகுநிலை, மேம்பாடு, செயல்பாட்டு இலகு நிலைகளையொட்டி தலைமைத்துவம் மேலும் பத்து வகைகளாக வரையறுக்கப்படுகின்றது. அவைமுறையே நிறைவேற்றுத் தலைமை, நிர்வாகத் தலைமை, கொள்கை வகுப்புத்தலைமை, துறைசார் நிபுணத்துவத் தலைமை, இலட்சியத்தலைமை, சமயத்தலைமை, தந்தை வாடாலத்தலைமை என்பனவாகும்.

(7) நிறைவேற்றுத்தலைமை, நிருவாகத் தலைமை, கொள்கைவகுப்புத்தலைமை துறைசார் நிபுணத்துவத்தலைமை, இலட்சியத்தலைமை, போன்றவையினது கடமைகள் கடப்பாடுகள் பெரும்பாலும் முகாமைத்துவத்துடன் தொடர்புடையதாகவும், அரசியல் தலைமை, அடையாளத் தலைமை, கவர்ச்சித்தலைமை போன்றவையினது கடமைகள் கடப்பாடுகள் அரசியல் சார்ந்தனவாகவும் சமயத்தலைமையினது கடமைகள், கடப்பாடுகள் சமயம் சார்ந்ததாகவும், இறையியல் சார்ந்ததாகவும், தந்தைவடிவத்தலைமையினது கடமைகள், கடப்பாடுகள் குடும்பம் சார்ந்ததாகவும் பெரும்பாலும் விளங்குகின்றன.

இலக்குக்களை எட்டுவதற்காக மானிடம் குழுக்களாக, நிறுவனங்களாக, அமைப்புக்களாகக், கட்டமைப்புகளாக தம்மை உருவகித்து, தகுந்த தலைமைத்துவத்தை ஏற்படுத்தி செயற்படுகின்றன என்பதை ஏற்கனவே பெறப்பட்டது. பொறுப்புமிக்க இத்தகைய பணிகளை விடயங்களை நிறைவேற்றிக் கொள்ளுகிற தலைமைக்கு சிலபல சிறப்புக்குணவியல்புகள் அவசியமாகின்றன. இத்தகைய சிறப்புக்குணவியல்புகள் அவற்றின் முதன்மைப் படிகள் எவை எது என்பன குறித்து உளவியலாளர்களிடையே முரண்பட்ட கருத்தோட்டங்கள் காணப்பெறினும், பின்வரும் குணவியல்புகளை.

(7 Opcil Henryclay Lindgren 1974 P 383

பொதுவாக, கருத்தொரு மித்த நிலையில் உளவியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. தலைமைத்துவத்தை சிறப்புறவழி நடாத்துவதற்கு ''அனுபவம்'' ஓர் முக்கிய குணவியல்பாக கருதப்படுகின்றது. அரச, தனியார் நிறுவனங்களில் தலைமை நியமனங்களில் நியமனம் சார்ந்த பிறதகுதிகள் கவனத்தில் எடுக்கப்படுகிற அதே வேளை, அனுபவத்திற்கும் கூடிய கனதி வழங்கப்பட்டு தெரிவுகள் இடம்பெறுகின்றன. ஆற்றலுக்கும், அனுபவத்திற்கும் தொடர்புண்டு என்பதனை மறுப்பதற்கில்லை என்கின்ற கருத்தினை விட்வரின் ஆய்வுகள் பிரேரித்து நிற்கின்றன. ஆயினும் இத்தொடர்புநிலை செயல்திறனிலே பெரிய வேறுபாடுகளை காட்டிடவில்லை எனவும் வேறு சில உளவியல் ஆய்வுகள் வெளிப்படுத்தவும் செய்கின்றன. எவ்வாறெனினும், தலைமைத்துவத்தின் சிறப்பியல்புகளில் ஒரு ''கௌரவச் சிறப்பியல்பாக அனுபவத்தினையும் ஏற்றுக் கொள்ளலாம்.

தலைமைத்துவப் பண்பின் நேர்கணிய வளர்ச்சிக்கு நுண்ணறிவின் (intelligence) சிறப்புநிலை முக்கியமானதொரு குணவியல்பாகக் கருதப்படுகிறது. (9) உளவியலாளர் றிச்சாட்மன்னின் ஆராய்ச்சிகள் தலைமைத்துவத்திற்கு நுண்ணறிவின் முதன்மையை துவக்கமாக எடுத்துக்காட்டுகின்றன. நுண்ணறிவு என்பது 'புரிந்து கொள்ளுகிற சிந்தனை அமைப்பு முழுவதினதும் உள்ளடக்கங்களாய் அமைகின்றது. உண்மையான நுண்ணறிவு உள்நோக்கி தூரதிருஷ்டியான பார்வை (தொலை நோக்கு நுணுக்கமான பண்புகளை வழங்குகின்றது.

8. I bid 1974 p 389

9. I bid 1974 p 390

நுண்ணறிவு வளர்த்துக் கொள்ளக்கூடிய தொன்றல்ல, அது பிறப்புடனாய் உடன் வருகிறதொன்று என்கிற கருத்து உளவியலில் புரையோடிய கருத்தொன்றாய் காணப்படுகிறது.

தலைமைத்துவத்தின் சிறப்புச் செயல்பாட்டிற்கு, 'செல்வாக்குச் செலுத்தல்' (Dominance) என்கிற குணவியல்பும் முக்கியமான தொன்றாக அமைகிறது. செல்வாக்குச் செலுத்துதல் என்பதிலான தீவிர நிலை பிறர்வான தலைமைத்துவத்திற்கு வழிச்செய்யும். மிதமான நிலையே நேர்கணியமான தலைமைத்துவ வளர்ச்சி நிலைக்கு வழிசெய்யும். மேலும் செல்வாக்குச் செலுத்துதல் என்பதும், தன்வசப்படுத்திக்கொள்ளுதல் என்பதும் வெவ்வேறானது. வசப்படுத்துதல் என்பது சுயம் இழந்த சரணாகதி நிலையையே குறிக்கும். உளவியல் சார் நோக்கில் செல்வாக்குச் செலுத்துதல் என்பது தன்வழி வருபவர்களது மனங்களை உளவியற் புரிந்துணர்வுடன் அதிகாரத்தைப் பயன்படுத்தாமல், கட்டுப்படுத்துகிற எச்சரிக்கை உணர்வை உண்டு பண்ணாமல் செல்வாக்கினைச் செலுத்துதலை குறிக்கும்.

தலைமைத்துவ சிறப்புக்குணவியல்புகளில் ஒன்றாக 'இசைந்து போதலும்' (adjustment) ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தலைமைத்துவம் கூடுதலான எதிர்பார்ப்புக்களை வழிவருவோரிடம் எதிர்பார்க்கிறபோது ஒரு வித உளவியல் பாதிப்பு வழிவருவோரிடம் ஏற்படும். இத்தகைய பாதிப்பினை சரி செய்து கொள்வதற்கு இசைந்து போதல் பெரிதும் கை கொடுக்கும். இத்தகைய இசைந்து போகிற இயல்பு இளையவர்களைக் காட்டிலும் முதியவர்களிடம் கூடுதலாகக் காணப்பெறும்.

சமகாலத்தில் தலைமைத்துவத்தின் கவர்ச்சிகரமானதொரு குணவியல்பாக புதியனவற்றுடன் தொடர்புறல் (New deal) எதிர்பார்க்கப்படுகிறது. நவீன சமுதாயம் விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக புது யுகத்தில் காலூன்ற விரும்புகின்றது. இதே விருப்பங்களுக்குத் தகுந்தாற்போல், தலைமையும் புதிது புதிதாக விடயங்களை அறிமுகப்படுத்துகிறபோது தலைமைத்துவத்தை நீண்ட காலம் தக்கவைக்கக்கூடிய நிலைப்பாடு உருவாகிறது.

முன்னெப்போதுமில்லாதவாறாய், இக்கால மனித சமுதாயம் தலைமைத்துவத்தின் மீது வெறுப்பையும், அதிருப்தியையும் மிக இயல்பாய் வெளிப்படுத்துகின்றது. தலைவர்கள் குறித்தும் உயர் பதவியிலிருப்பவர்கள் குறித்தும் கேலிச்சித்திரம் வரைதலும், விகடகவி புனைதலும், இரு அர்த்தம்பட எழுதுவதும் மரபாகிவருகின்றது. இந்த நிலைமை தலைமைத்துவம் துரோகம் இழைத்தமையால் மட்டும் உருவாகும் நிலையல்ல. இகள்தலும் இம்சைப்படுத்தலும் மனிதனுக்குரிய இயல்பான, ஆனால் வெறுக்கத்தக்க குணவியல்புகளேயாகும். தலைமைத்துவத்திடமிருந்து நாம் சுதந்திரமாக இருக்கவேண்டும் என்கிற எண்ணமுனைப்பும் பிறரது ஒத்தாசையும் தலையீடுமின்றித் தனது கருமங்களைத் தனே செய்ய வேண்டும் என்கிற எண்ணப்பாங்குகளும் இத்தகைய அதிருப்தி நிலைகளுக்குக் கால்கோளாகின்றன. அதுமட்டுமல்ல தனிப்பட்ட முறையில் தன்னோடு தொடர்புற்றவர்கள், விருப்பத்துக்குரியவர்கள் அத்தகைய பதவி நிலையைப் பெற வேண்டும் என்கிற ஆவலினாலும் இத்தகைய வெறுப்பைத் தலைமைத்துவத்தில் காட்டிக் கொள்கின்றனர். மேலும் சிலர் கூட்டுவாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்புக்களினாலும் தலைமைத்துவத்தைச் சாடிக் கொள்வார்கள். இந்நிலைமைகளுக்கெல்லாம் ஈடுகொடுக்கத்தக்கவாறாக நவீன தலைமைத்துவங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

தலைமைத்துவ முன்னெடுப்புகள் சிறப்புற அமைய தலைமைத்துவம் குறித்த கற்கை நெறிகளைத் தெரிந்து கொள்வதிலும் பார்க்க கடந்தகால தலைமைத்துவங்களின் தோல்விகளை ஆராய்ந்து பார்த்தலே அதிக பயனைத்தரும்.

•

க. சிவானந்தமூர்த்தி
சிரேஸ்ட விரிவுரையாளர்
தரம் 01
மெய்யியல்துறை
யாழ்பல்கலைக்கழகம்.

# வாழ்த்துச்செய்தியும் கியூடெக்கின் செயற்பாடுகளும்

சமூக அபிவிருத்திப் பணிகளிலே தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஏழை மக்களின் மனதை வென்றெடுத்த மேற்படி மன்றத்தின் 10 வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மனித முன்னேற்ற நிலையம் ( கியூடெக் ) பெருமகிழ்ச்சியடைகின்றது. மன்றத்தின் பணிகள் மேலும் பல இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு பல இன மக்களின் நெஞ்சகத்தே குடியிருக்க வேண்டுமென்று வாழ்த்திநிற்கிறோம்.

இந்த சுபவேளையில் தங்களது வேண்டுகோளுக்கிணங்க எமது நிலையப் பணிகளைப் பற்றி சில வார்த்தைகள் கூறுவது பொருத்தமாக இருக்கும். ம. மு. நி ( கியூடெக் ) தனது பணி வாழ்வில் 25 ஆண்டுகளைக் கடந்து வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. வடக்கு கிழக்கு மாகாணத்திலே அரச சார்பற்ற ஓர் தொண்டர் நிறுவனமாக முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற முதுமொழிக்கு சான்றாக சாதி, மத, பொருளாதார கல்வி அந்தஸ்துகளுக்கப்பாற்பட்டு பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பல சவால்களை எதிர்கொண்டும் தனது பணிகளுக்கு அதிக விளம்பரத்தை விரும்பாமல் செயற்றிட்டங்களையே முன்நோக்காக கொண்டு, இலைமறை காயாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் நிறுவனம் மனித முன்னேற்ற நிலையம் ( கியூடெக் ), என்றால் மிகையாகாது.

ஆரம்பத்திலேயே தனிநபர் உதவியை விட கூட்டு முயற்சித் திட்டங்களையே ஊக்குவித்தும் ஆதரித்தும் வந்துள்ளது அதாவது மீன்பிடி, கமத்தொழில், தும்புத் தொழில், குடிசைக்கைத்தொழில் போன்ற தொழில்களில் ஈடுபடுவோர்க்கு உபகரண உதவிகளும், பொருளாதார தரத்தை மேம்படுத்துவதற்காக வட்டி இல்லாக் கடன் உதவித்திட்டமும் அமுலாக்கப்பட்டிருந்தன. அப்படியான கூட்டுத் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சுழற்சி முறைக்கடன் திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. இத்திட்டம் பொருளாதார ரீதியில் மக்களை வளர்சியுறச் செய்தது மாத்திரமல்ல மேலும் பல வறிய மக்களை சுயதொழில் கழிலும் ஈடுபட வழிவகுத்தது. கடற்றொழிலாளர்களுக்கான வலைகள், வெளிப்புற மோட்டார்கள், பிளாஸ்ரிக் படகுகள் மற்றும் விவசாயிகளுக்கான நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவி, சிறியரக உழவு இயந்திரம் போன்றவற்றை நீண்டகால கடன் அடிப்படையிலே மக்களுக்கு வழங்கி வந்த பெருமை மனித முன்னேற்ற நிலையத்தாருக்கு சாரும் என்றால் மிகையாகாது. இத்திட்டத்தின் கீழ் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அவ்வவ் பகுதி சங்கங்களூடாக நிதியுதவி வழங்கப்பட்டது.

காடுகளாகக் காட்சி அளித்த வன்னிப் பகுதி நிலங்கள் மக்கள் குடியிருக்க கூடிய வகையில் குடிசைகள் அமைத்துக் கொடுத்து வெறும் தரிசு நிலங்களை விவசாயப் பண்ணைகளாக மாற்றி அமைத்து ஏழை மக்களை தாழ்நிலையிலிருந்து மேல் நிலைக்கு உயர்த்துவதற்கு வழி சமைத்து கொடுத்தது மட்டுமன்றி ஆங்காங்கே மலசல கூடங்கள், கிணறுகள் மற்றும் கல்விக்காக சிறிய பாடசாலைகள், வழிபாட்டிற்காக சிறிய ஆலயங்கள் பொழுது போக்கை நல்ல

முறையில் பயன்படுத்துவதற்காக நூல் நிலையங்கள், வறியோர், முதியோர், அநாதைகளுக்காக பராமரிப்பு நிலையங்கள் வெளிநாட்டு உதவிகளோடு நிறுவி அவற்றை பராமரித்தும் வந்துள்ளது அத்தோடு மக்களின் சுகாதார மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு எமது பணிகள் திருச்சிலுவைக் கன்னியர் மடத்தினூடாக நடமாடும் மருத்துவ சேவை மூலம் நிறைவேற்றப்படுகிறன்றன. மேலும் படித்த வாலிபர்களின் தொழில் நுட்பத்திறனை அறிந்து அதற்கேற்ப செயற்படக்கூடியதும் நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதுமான தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பற்றிசியன் தொழிற்பயிற்சி நிலையம், என்ற பெயரில் யாழ். நகரில் உருவாக்கப்பட்டுள்ளது. திவகத்தில் எமிலியானுஸ்பிள்ளை தொழிற் பயிற்சி என்ற பெயரிலும் மற்றுமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. சர்வகலாசாலை அனுமதி பெற்ற பொருளாதார நெருக்கடி காரணமாக தொடர முடியாத ஆண், பெண் இருசாராருக்கும் நிதியுதவி வழங்க அவர்களை முன்னேற்றுவது எமது பணிகளில் ஒன்றாகும். இவற்றைத்தவிர விதவைகளுக்கும் உழைப்பாளியை இழந்த குடும்பத்திற்கும் சுய தொழில் ஊக்குவிப்புப் பணமாக நிதியுதவி வழங்கி வருகிறோம்.

ஆனால் துர்அதிஷ்டவசமாக 1983 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குப்பின் எமது செயற்பாடுகளில் சில மந்த நிலையும், பின்னடைவும் ஏற்படத் தொடங்கின. மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, அரசுக்கெதிரான பிரசாரங்களும், நடவடிக்கைகளும் அரசின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி அதன் ஓர் அங்கமாக அரசு சில கட்டுப்பாடுகளை அமுல்படுத்தியதின் விளைவாக எம்மைப்போன்ற ஏனைய தொண்டர் நிறுவனங்களையும் வெகுவாகப் பாதித்தது அபிவிருத்தி திட்டங்கள் கைவிடப்பட்டன. அதற்கென ஒதுக்கப்பட்ட நிதி அகதிகள் புனர்வாழ்விற்கு பயன்படுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதே வேளை வெளிநாட்டு நிதியுதவிகளுக்கும் அரசினால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அதன்விளைவாக பணப்பற்றாக்குறை நிலவத் தொடங்கியது. இதனால் வீடிழந்து, பொருழிழந்து உயிருக்குயிரான உறவுகளை இழந்து சொந்த நாட்டிலே அகதிகளாக அநாதைகளா, விதவைகளாக, ஊனமுற்றவர்களா, மன நோயாளர்களாக வாழும் பலதரப்பட்ட மக்களுள் ஒரு சாராரையாவது பராமரித்து அல்லல் போக்குவதுதான் எம்போன்ற நிறுவனங்களின் மேல் சுமத்தப்பட்டுள்ள பாரிய கடமையாகும்.

இவற்றிற்கு மேலாக மக்களின் பாரம்பரிய செல்வங்களாகிய கல்விச்செல்வத்தை எமது வருங்கால சமுதாயத்தினர் முழுமையாக அடையக்கூடிய வாய்ப்பினை உருவாக்குவதே எமது இன்றைய முக்கிய குறிக்கோள்.

**வண. பிதா. ஜோ. ஜெயக்குமார்**
பணிப்பாளர்
மனிதமுன்னேற்ற நடுநிலையம்
யாழ்ப்பாணம்

# மன்றத்தின் வரலாற்றுப் பாதையில்
## தசாப்த கால விருத்தி

இருபதாம் நூற்றாண்டிற்கு பிரியா விடை கொடுத்து இருபத்தியொராம் நூற்றாண்டினை வரவேற்கப் போகும் இந்த வேளையில் எமது மன்றத்தின் 10வது ஆண்டு விழாவை கொண்டாடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். இந்த வேளையில் முன்னேற்பாடாக எமது மன்றத்தின் தசாப்தகால விளைவுகளை என் சிந்தனையில் நிறுத்தி உங்கள் நினைவுடனே மீட்கின்றேன்.

23-07-88ல் எமது யாழ். மாவட்டத்திலுள்ள மக்களிற்கு இனிய நாள். அன்றுதான் இந்த மன்றத்திற்கு அத்திவாரக் கல்லாக அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. சமுக அபிவிருத்தி மன்றமென்று இன்று தசாப்த காலத்தில் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கும் எமது மன்றத்தின் கொள்கைகள், சிந்தனைகள், செயல்கள் இனிமையானவை. எல்லோராலும் போற்றுதற்குரியவை. வறுமைக் கோட்டின் கீழே வாழுகின்ற மக்களை இனம்கண்டு இவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி பெண்ணடிமை தனத்தினை நீக்கி மகளிரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய மன்றம் என்றால் அது மிகையாகாது.

யாழ் மாவட்டத்திலுள்ள மக்கள் போர்ச் சூழ் நிலைகளினால் பாதிப்படைந்து நலிவுற்றிருந்த வேளை மக்களின் அவலங்களை காரணம் காட்டி வெளி நாடுகளிலிருந்து எடுக்கப்படும் நிதி உதவிகள் எமது மக்களிற்கென எடுத்து வேறு பிரதேசங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. எதனையும் நேரடியாக பெறமுடியாத நிலை, கிராமங்கள் தோறும் மக்கள் படும் இன்னல்களை நேரடியாக் கண்டு மனம் வெதும்பி மக்களிற்காக இரக்கப்பட்டு இம் மன்றத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று நோக்கி வடக்கு கிழக்கு மாகாண சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக கடமையாற்றிய அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மக்களிற்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் தனது பதவியை துறந்தார். கூட்டுறவு சேவா ரத்தினம் என பெயர் பெற்ற அமரர் ஞானப்பிரகாசம் அவர்கள் திருவாளர் மு. ஸ்ரீ சண்முகராஜா அவர்களது உதவியுடன் யாழ். மாவட்டத்திலே உலர் வலய அபிவிருத்தி மன்றத்தினை ஆரம்பித்து வைத்தார்.

இதன் நோக்கம் தன் கையே தனக்கு உதவி என்பதற்கிணங்க எல்லோரும் எமது சொந்தக்காலில் நிற்கவேண்டும் என்பதனை வலியுறுத்தி பத்து ரூபா சேமிப்பு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். ஆரம்ப காலத்தில் அவரது பிரச்சாரத்தினாலும் கிராம மட்டங்களிலுள்ள மகளிர் தலைமைத்துவத்தினூடாகவும் வெற்றிகரமாக பல கழகங்கள் உருவாக்கப்பட்டன.

உலர் வலய மன்றத்தின் இணைப்பதிகாரியாக அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் தவிசாளர் ஸ்ரீ சண்முகராஜா தலைவர் திருமதி பேபி சரோஜா, கனக சபேசன் உபதலைவர் திரு. லோ. வாகீசன் செயலாளர் ச. செந்தூர் ராஜா, பொருளாளர் செல்வி. வி. தனலட்சுமி.

**நிர்வாக உறுப்பினர்கள்:**

திருமதி. ச. பரமானந்தன்
திருமதி. J. ஜோசவ்
திருமதி. இருமாம்பிகை தவராஜா
திருமதி. வ. இந்திரராஜா
திருமதி. N. ஜெகதீசன்
திருமதி. மங்கையற்கரசி
திருமதி. ந. மகேஸ்வரி
செல்வி. தி. லோகேஸ்வரி

செல்வி. த. நல்லதம்பி
செல்வி. தி. அருளம்பலம்
செல்வி. க. வைகுந்தராணி
திரு. M. K. முருகையா
திரு. S. தேவராஜா
திரு. S. பாலசுப்பிரமணியம்
திரு. R. லோகநாதன்
திரு. J. மகாதேவன்

இந் நிர்வாக உறுப்பினர்கள் உட்பட ஆரம்பத்தில் செயலாற்றினார்கள். 26-08.88 இல் நிர்வாக உறுப்பினர்களான

திரு இரா. லோகநாதன்
திருமதி. பேபி சறோஜா

உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தில் செயற்பாடு பற்றி அறிவதற்காக இந்தியாவிற்கு வேலைப்பட்டறைக்கு அனுப்பப் பட்டார்கள்.

1988 – டிசம்பர் திருமதி. J. ஜோசவ் இந்தியாவிற்கு பயிற்சிக்காக அனுப்பப் பட்டார்.

எமது மன்றத்தின் செயற்பாடுகளையும் ஸ்திரத் தன்மையையும் அறிந்து நொறாட் ஸ்தாபனம் விவசாய சுயதொழில் விஸ்தரிப்பிற்காக 12 லட்சம் நன்கொடையாக வழங்கியது

U. N. Uவிட் பொறுப்பாளர் டாக்டர் பொன்னா விக்னராஜா அவர்களது அனுசரணையுடன் பெண்கள் வறுமை வேலை வாய்ப்பு தலைமைத்துவம் போன்ற பல பயிற்சி வகுப்புக்கள் எம் அங்கத்தவர்களிற்கு கொழும்பில் வைக்கப்பட்டது. யாழ். மாவட்டத்தில் அவர்களது வெளிக்கள உத்தியோகத்தர்களான திரு. மனோராஜ சிங்கம் திருமதி. சாந்தி மனோராஜ சிங்கம் ஆகியோரால் பல பயிற்சி கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. 20-05-89இல் புதிய தலைவர் நியமனம் செல்வி. அருளம்பலம் உபதலைவர் தெரிவு 16-08.89இல் திருமதி. J. ஜோசவ் செயலாளர் செல்வி. தி. லோகேஸ்வரி 1989இல் அவுஸ்ரேலியர் உயர் ஸ்தானிகராலயம் 72,500/- மகளிர் தட்டச்சு பயிற்சி வகுப்பிற்கென வழங்கப்பட்டது. இதன் மூலம் மண்டைதீவு, இடைக்காடு, உரும்பிராய், நீர்வேலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தட்டச்சு பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டது.

மனைப் பொருளாக பயிற்சி வகுப்பு யாழ்ப்பாணம், நீர்வேலி ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டது.

நல்லை ஆதீனத்தில் மாதாந்தம் ஒவ்வொரு போயா தினத்தன்றும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கர்நாடக நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வந்தன.

1989இல் G. S. கடன் ஒரு லட்சம் ரூபா இளைஞர் அபிவிருத்திக்கென முள்ளி, காமாட்சி தச்சுத் தொழிலாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு மூவாயிரம் விவசாயிகளுக்கு கெயர் விவசாய திட்டம் கிடைக்கப் பட்டது. அவ்வேளை பல ஊழியர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

கார்த்திகை 23, 1990 ஆம் ஆண்டு எமது மன்றத்தின் ஸ்தாபகர் இயற்கை யெய்தினார். அவ்வேளை மன்றத்திற்கு உயிர் கொடுக்க தற்போதைய இணைப்பதிகாரியாக விளங்கும் திருமதி. ரு. ஆனந்தவேல் அவர்கள் கூட்டுறவு திணைக்களத்தில் கடமையாற்றினார். தனது சேவைக்காலம் முடிவுற முன்னரே மன்றத்திற்காக தனது பதவியை துறந்து கௌரவ செயலாளராக தன்னை அர்ப்பணித்தார். அன்றிலிருந்து இன்றுவரைசிறந்த சேவையாளராகவும் கணக்காய்வாளராகவும் எமது நிர்வாக நடவடிக்கையின் ஒருங்கமைப்பாளராகவும் இயங்கிவருகிறார்.

1992ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பழைய தலைவராகவும் காரியாலயத்தில் சகல கடமைகளையும் பொறுப்பேற்றிருந்த திருமதி. திருஞானசோதி குணேந்திரன் தனது தலைவர் பதவியை துறந்து ஊழியராக பதவியேற்றல் என்றதிலிருந்து திருமதி. நவநிதம் ஜெகதீசன் அவர்கள் சிறந்த தலைவராகவும் எதனையும் இலகுவாக கண்டுபிடிக்கும் ஆற்றல் மிக்கவராகவும் சிறந்த தலைவியாகவும் பொறுப்பேற்று நல்ல நிர்வாகத்தினையும் அமைத்தார்.

1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உலர் வலய அபிவிருத்தி மன்றமாக இயங்கி வந்த இம்மன்றமானது சமூக அபிவிருந்தி மன்றம் என்ற பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சமூக சேவைகள் திணைக் களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இதன் சகல நடைமுறை விதிகளும் யாப்பு கள், சொத்துக்கள் அனைத்தும் பொதுச் சபையின் ஏக மனதான தீர்ப்பின்படி அதே நிர்வாக சபையின் கீழ் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதன் பின்னர் இடம் பெயர்ந்தோருக்கான புனர்வாழ்வு பயிற்சி கருத்தரங்குகள் மகளிருக்கான பயிற்சியில் விழிப்புணர்வு கருத்தரங்கு ஆகியன நடத்தப் பட்டன. 1995ஆம் ஆண்டு இடம் பெயர்ந் திருந்த போதிலும் அங்கத்தவர்களின் நன்மை கருதி தற்காலிக காரியாலயம் அமைத்து அங்கத்தவர்களிற்கு தேவையான உதவியை வழங்கியது.

அவ்வேளையில் கூட பாலர் முன் பள்ளிகளை ஸ்தாபித்து சிறுவர்களை உடல் உள ரீதியான தாக்கங்களிலிருந்து காப் பாற்றியது.

1996ஆம் ஆண்டு மீண்டும் யாழ். நகர் திரும்பி வந்தபோது கிராம மக்க ளிடையே அங்கத்தவர்களிற்கான தேவை மதிப்பீட்டினை செய்து ஏனைய நிதி வழங் கும் ஸ்தாபனங்களுடன் அவர்களை தொடர்பு படுத்தி அவர்களுக்கு உதவி கிடைக்கக்கூடிய வகையில் பல திட்டங் களை தீட்டி வருகிறது.
**1997வரை திருமதி ஜெபநேசன் நியமனப் பதவியில் இருந்தார்.**

கிராமத்திலே உள்ள குழந்தைகள் இராணுவ நடவடிக்கையால் உள உடல் ரீதியாக பாதிக்கப்பட்டிருந்ததை கவனத்தில் கொண்டு அவர்களது மனோவளர்ச்சியை மாற்ற வேண்டும் என்பதற்காக பாதிக்கப் பட்ட இடங்களில் பார்வையிட்டு பல பாலர் முன் பள்ளிகள் அமைக்கப்பட்டன. 30 பாலர் முன்பள்ளிகள் அமைப்பதற்கு அறிவுரைகள் கூறி முன்பள்ளிகள் ஆரம் பித்து வைக்கப்பட்டன. பின்னர் அதில் பத்து முன்பள்ளிகள் தற்போது முன் னெடுத்து செல்லப்படுகின்றன.

1998ஆம் ஆண்டு புதிய தலைவராக திரு. கோ தியாகராஜா அவர்களை தலைவ ராக கொண்டு தற்பொழுது மன்றமானது இயங்கி வருகிறது. எங்களது தசாப்த காலத்திட்ட திருப்பு முனையாக இதுவரை காலமும் மகளிர் தலைமைத்துவத்திலே இயங்கி வந்த எமது மன்றம் தற்போது ஆண் தலைவரை தன்னகத்தே கொண் டுள்ளது.

எமது மன்றத்தில் 75%ற்கு மேற் பட்டோர் மகளிர் அங்கத்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. ஏனைய வெளிநாட்டு ஸ்தாபனங்களுடன் தொடர்புகள் ஏற்பட் டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. கிராம மக்களுடனான தேவை மதிப்பீடு பங்களிப்பு செய்யப்பட்டது. கெயர் யூனி செவ் UNHCR போன்ற ஸ்தாபனங்கள் மூலம் ஒரு சில உதவியை கிளைகள் கழகங் களிற்கு பெற்று கொடுத்தோம்.

இப்படியாக எமது மன்றத்தின் சேவைகள் மனித சமூகத்திற்கு மதிப்பளிக் கும் பண்புக் கூறுகள் பல உள. அவற்றுள் ஒன்றே மனித சமுதாயத்திற்கு குறிப்பாக கூட்டுறவு சமுதாயத்திற்கு பாரதி கண்ட புதுமைப் பெண்ணிற்கு இலக்கணமாய் எமது மகளிர்களின் சேவையினை அங்கத்தவர் களின் ஆதரவை சகல நிர்வாகங்களின் ஒத்துழைப்பை பணிப்பாளர்களின் ஆலோ சனைகளை இதுவரை காலமும் எம்முடன் இணைந்து மன்றத்திற்காக பாடுபட்ட அனைவர்களையும் இவ்விடத்திலே நினைவு கூர்ந்து எமது நன்றியினையும் பாராட்டு தலையும் தெரிவித்து கொள்கிறோம்.

வாழ்க சமுதாயம் வளர்க எம் மன்றம்!

**திருமதி திருஞானசோதி குணேந்திரன்**
நிர்வாகச் செயலாளர்.

O *நண்பர்களுக்கும்*

O *வாடிக்கையாளர்களுக்கும்*

# தொலைபேசி அழைப்புக்கள்

★ **உங்கள் தொலைபேசி அழைப்புகள் அனைத்திற்கும் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.**

★ **வெளிநாட்டிலிருந்து வரும் தொலைபேசி அழைப்புகள் பற்றிய விபரம் உங்கள் இல்லம் நாடி வந்து வழங்கப்படும்.**

★ FAX **வசதியும் உண்டு**

## தயா தொலைத் தொடர்பு நிலையம்

**220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

தொலை பேசி இல : **2234 - 021 - 2908**
பாக்ஸ் இல : **2234**

10வது ஆண்டில் பரந்து சேவை புரிந்த
சமூக அபிவிருத்தி மன்றத்தின் செயற்பாடுகள்
மேலும் வளர்ச்சியடைய மனமுவந்து
வாழ்த்துகிறோம்

தரமான

▶ பனைவெல்லம் ▶ பனஞ்சீனி ▶ காலாக்காரம்

மற்றும் பனைசார் உற்பத்திப் பொருட்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஸ்தாபனம்

பனை தென்னைவள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம்

K. K. S. வீதி — யாழ்ப்பாணம்

---

தசாப்த காலத்தின் சேவையினை
பெருமையுடன் பூர்த்தி செய்யும்
சமூக அபிவிருத்தி மன்றத்தினை
மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்

மகளிர்க்கான பயிற்சிகள் அளித்து
மகளிர் அபிவிருத்திக்காக அல்லும் பகலும் உழைத்து
பாவனையாளர்களின் தேவைகளைப் புரிந்து
தரமான உணவுப் பொருட்களை மலிவு விலைக்கும்
மக்கள் நன் நிறைவு காணும் ஓர் உன்னத ஸ்தாபனம்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பளை

பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள்

தரமான உலர் உணவுப் பொருட்களை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

நீர்வேலி


---


பத்தாவது ஆண்டினை நிறைவு செய்யும்
யா / சமூக அபிவிருத்தி மன்றத்தை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறோம்

- நுகர்ச்சிச் சேவை
- கிராமிய வங்கிச் சேவை
- விவசாய சேவை
- புடவை விற்பனை
- இரண்டு சில்லு உழவுயந்திர சேவை
- பேக்கரி உற்பத்திகள்
- கதிரை வாடகை
- கட்டடப் பொருட் கூட்டுத்தாபன வடமராட்சி முகவர்
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் விற்பனை முகவர்

# தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

தெல்லிப்பளை

**சகலவிதமான மின் உபகரணங்களுக்கும்**

# ஒளியருவியை

**நாடுங்கள்**

*யாழ்ப்பாணம்*

---

*சமூக அபிவிருத்தி மன்றத்தின் 10வது ஆண்டு நிறைவு தினமாகிய இந் நன்நாளை, சாவகச்சேரி கூட்டுறவுச் சங்க முகாமையாளர், உறுப்பினர்கள், பணியாளர்கள் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.*

## சாவகச்சேரி ப.நோ. கூட்டுறவுச் சங்கம்

**யாழ். வீதி, சாவகச்சேரி.**

கடந்த பல ஆண்டுகளாக பாவனையாளர்களின் தேவைகளைப் புரிந்து தரமான உலர் உணவுப் பொருட்களை மலிவு விலைக்கும், மக்கள் தன்நிறைவு காணும் விதத்தில் விற்பனை செய்யும்
ஓர் ஸ்தாபனம்

**சாவகச்சேரி கூட்டுறவுச் சங்கம்**

*தரமான புடவை வகைகளுக்கு*

**சாவகச்சேரி ப. நோ. கூட்டுறவு புடவை மாளிகை**

*சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி*



பொதுச் சபையினரில் ஒரு பகுதி



கடன் உபகுழு

யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாவையிட்டு இம்மன்றம் சகல சிறப்புக்களையும் பெற்று சிறந்த சேவையாற்ற வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

# வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து.)

அச்சுவேலி

" கூட்டுறவு நாட்டுயர்வு "

எமது சங்கம் வாடிக்கையாளர்கட்கும், அங்கத்தவர்கட்கும் ஆற்றிவரும் சேவைகள்:-

1. நுகர்ச்சிப் பொருட்கள் விநியோகம்
2. உலர் உணவுப் பொருட்கள் விநியோகம்
3. எரிபொருள் ,,
4. கட்டிடப் பொருட்கள் ,,
5. அழகு சாதனப் பொருட்கள் ,,
6. பல்பொருட்கள் ,,

1. ஒப்பந்த சேவைகள்
2. கல்விச் சேவைகள்
3. வங்கிச் சேவைகள்
4. வாடகைக் கதிரைகள் சேவைகள்
5. மகளிர் மனைப் பொருளியல்
6. பயிற்சிகள் சேவைகள்
7. மருந்தக சேவை
8. தொலைத் தொடர்பு சேவைகள்

எமது கிளை நிலையங்களில் தரமான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும், தரமானதாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

---

சமூக அபிவிருத்தி மன்றத்தின் 10வது ஆண்டு நினைவு தினமாகிய இந் நன்நாளை, மானிப்பாய் கூட்டுறவுச் சங்க முகாமையாளர், உறுப்பினர்கள், பணியாளர்கள் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.

# மானிப்பாய் பரிஷ் கூட்டுறவுச் சங்கம்

கரைநகர் வீதி, மானிப்பாய்.

கடந்த பல ஆண்டுகளாக பாவனையாளர்களின் தேவைகளைப் புரிந்து தரமான உலர் உணவுப் பொருட்களை மலிவு விலைக்கும், மக்கள் தன்நிறைவு காணும் விதத்தில் விற்பனை செய்யும் ஓர் ஸ்தாபனம்

மானிப்பாய் கூட்டுறவுச் சங்கம்

தரமான புடவைகவகைகளுக்கு

மானிப்பாய் பரிஷ் கூட்டுறவு புடவை மாளிகை

எரிபொருள் தேவைகளுக்கு

எரிபொருள் விற்பனை நிலையம்

மானிப்பாய் பரிஷ், மானிப்பாய்

# சங்கானை
# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)

**பிரதான வீதி, சங்கானை.**

தரமான வெதுப்பக தேவைக்கு:

**மக்கள் வெதுப்பகம்**

கொட்டைக்காடு. வட்டுக்கோட்டை.

தரமான உணவக தேவைக்கு;

**மக்கள் உணவகம்**

பிரதான வீதி, சங்கானை.

தரமான நல்ல புடவை வகைகளுக்கு;

**மக்கள் புடவையகம்**

சங்கானை.

தேவையான நிழற்படப் பிரதிகள், அடையாள அட்டை கவரிடுதல், றோணியோ தேவைகளுக்கு

**சங்கக் காரியாலயம்**

பிரதான வீதி, சங்கானை.

எரிபொருள் தேவைகளுக்கு :

**எரிபொருள் நிலையம்**

சித்தங்கேணி.


---


*யாழ் சமூக அபிவிருத்தி மன்றத்தின் 10வது ஆண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு எமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், அதன் சேவை மேலும் சுடர் விட்டுப் பிரகாசிக்க எமது நல் வாழ்த்துக்கள்*

குறைந்த விலையில்; உன்னத முறையில்; சிறந்த தயாரிப்பு
வடமாகாணத்தில் ஒரேயொரு கூட்டுறவு நிறுவனம்
மக்கள் கவரும் வகையில் உடைகளைத் தயாரித்து
வழங்குவது

# பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

## பண்டத்தரிப்பு

உடலுக்கும் உணவிற்கும் உகந்த முறையில்
தயாரிக்கும் பண்கோப் நல்லெண்ணை
தரத்திலும் குணத்திலும், மணத்திலும் குன்றாச் சுவை
தருவது பண்கோப், பாண், பணிஸ் வகைகள்
தயாரிப்பாளர்

**பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்**

பண்டத்தரிப்பு

பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள்

தரமான உலர் உணவுப் பொருட்களை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கொடிகாமம்

---

பத்தாவது ஆண்டினை நிறைவு செய்யும்
யா / சமூக அபிவிருத்தி மன்றத்தை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறோம்

- நுகர்ச்சிச் சேவை
- கிராமிய வங்கிச் சேவை
- விவசாய சேவை
- புடவை விற்பனை
- இரண்டு சில்லு உழவுயந்திர சேவை
- பேக்கரி உற்பத்திகள்
- கதிரை வாடகை
- கட்டடப் பொருட் கூட்டுத்தாபன வடமராட்சி முகவர்
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் விற்பனை முகவர்

# புலோலி ப. நோ. கூ. சங்கம்

புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

✻ பத்தாவது ஆண்டினை நிறைவு செய்யும்
யா / சமூக அபிவிருத்தி மன்றத்தை வாழ்த்துகின்றோம்

மெடி எயிட்ஸ் மருந்தகம்
644, பருத்தித்துறை வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்

மெடி எயிட்ஸ் வைத்தியசாலை
689, பருத்துறைச்சாலை
முத்திரைச் சந்தை
நல்லூர்

Tele Link Communication Service

ரெலி லிங்க் கொம்மியூனிகேசன் சேவிஸ்

CODE NO : 021    TEL. NO : 2183

உள் நாட்டு வெளி நாட்டு
தொலைத் தொடர்பு சேவை

பருத்தித்துறை வீதி
நல்லூர்

**Stationeries Paradise**

*Dealers in*

Stationeries office Equipments
&
School Items

646, Point Pedro Road,
Nallur, Jaffna.

**Superior Photostat**

646, Point Pedro Road
Nallur
Jaffna

## 1992

திரு. தங்கவடிவேல் களஞ்சயப் பொறுப்பாளர்
செல்வி. புஸ்பதே, வெ, உ.
செல்வன். நீரூபன்
திட்டப் பொறுப்பாளர் முழு நியமனம்
திரு. A. M. றாஜ்குமார் கௌரவ சேவையாளர்
உள்துறை எண்பார்வையாளர்
திரு. ந. ஆனந்தவேல், திரு. நத்தகுமார், திரு. பாக்கியநாதன்

## 1988ஆம் ஆண்டு (23-7-88)

இணைப்பதிகாரி; அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்
தலைவர்:- திருமதி. பேபி சறோசா கனகசபேசன்
உப. தலைவர்:- திரு லோ. வாகிசன்
செயலாளர்:- திரு. ச. செந்தூர்ராஜா
பொருளாளர்:- செல்வி. V. தனலட்சுமி

நிர்வாக உறுப்பினர்கள்

திருமதி. ச. பரமானந்தன்
திருமதி. J. ஜோசப்
திருமதி. ச. நடராசா
திருமதி. கிருபாம்பிகை தவராஜா
திருமதி. வ. இந்திரராஜா
திருமதி. N. ஜெகதீசன்
திருமதி. மங்கையக்கரசி
திருமதி. ந. மகேஸ்வரி
செல்வி. தி. லோகேஸ்வரி
செல்வி. த. நல்லதம்பி
செல்வி. தி. அருலம்பலம் திருஞானசோதி
செல்வி. K. வைகுந்தறாணி.

திரு. M. K. முருகையா — திரு. S. தேவராசா
திரு. S. பாலசுப்பிரமணியம் — திரு. R. லோகநாதன்
திரு. ச. மகாதேவன்

## (20 — 5 — 1989)

புதிய தலைவர் நியமனம்;- செல்வி, T. அருலம்பலம்
உப, தலைவர் தெரிவு (16-8-89)
திருமதி J, ஜோசவ்
செயலாளர்;- செல்வி, தி. லோகேஸ்வரி
உளத்துறை எண் பார்வையாளர்
திருமதி. ரு. ஆனந்தவேல்

## 9 — 11 — 92 முதல் 4 — 4 — 94 வரை

தலைவர்:- திருமதி. நவநீதம் ஜெகதீசன்

உப தலைவர்:- திருமதி. ஜெபமணி ஜோசவ்

| | |
|---|---|
| திரு. சீவரட்ணம் | திருமதி. பரமானந்தன் |
| திரு. த. நந்தகுமாரன் | செல்வி. க. வைகுந்தராணி |
| செல்வி. தி. லோகேஸ்வரி | திருமதி. வ. இந்திரராஜா |
| செல்வி. த. நல்லதம்பி | திரு. வ. இ. இராஜ்குமார் |
| திருமதி. த. நடராஜா | திரு; அ. மை இராஜ்குமார் |
| திரு. ச. பாலசுப்பிரமணியம் | திருமதி ந. மகேஸ்வரி |

திருமதி. மங்கையக்கரசி

## 2 — 4 — 94

| | |
|---|---|
| திரு. சோ. நடராசா | திரு. தர்மலிங்கம் |
| திருமதி நவநீதம் ஜெகதீசன் (தலைவர்) | திரு. ஆ. த ஜெயராஜா |
| திரு. ரீ. சீவரட்ணம் (உபதலைவர்) | திரு. நோ. தியாகராஜா |
| திரு. இ திருநாவுக்கரசு | திருமதி இ. இந்திரராஜா |
| செல்வி. க. வைகுந்தறாணி | திரு. த. தி. தாமரைச் செல்வன் |

திரு. ந. வி. நல்லைநாதன்

நிர்வாகச் செயலாளர்;- திருமதி. மதிவதனி ஜெயக்குமாரன்

பதில் நிர்வாகச் செயலாளர்:- திருமதி. திருஞானசோதி குணேந்திரன்

| | |
|---|---|
| திருமதி. குணவதி. சிவராஜா | செல்வி. த. கௌந்தி |
| செல்வன். வி. பாலராஜன் | திருமதி. ஜெ. ஜோசவ் (காசாளர் |

## 15—11—93 —— 31—12—94

திரு. பே. அருட்செல்வன்
திருமதி நளினாராணி தம்பிராஜா
செல்வி வ. மோகனகுமாரி
செல்விச. சகுந்தலை
செல்வி க. சிவகௌரிதேவி
திருமதி ச. வித்தியானந்தன் (நீர்வேலி களஞ்சியம்)
செல்வி இ. விஜயானந்தி (நீர்வேலி களஞ்சியம்)
திருமதி சிவாஜினி கதிர்காமநாதன் (மானிப்பாய் களஞ்சியம்)
செல்வன் பி. நிருபன் (மானிப்பாய் களஞ்சியம்)
திரு கி. தங்கவடிவேல் (மானிப்பாய் களஞ்சியம்)

**ஏனைய பணிப்பாளர்கள்**

திருமதி ச. பரமானந்தன்
திருமதி வ இந்திரராஜா
திருமதி ந. மகேஸ்வரி
செல்வி ந. நல்லதம்பி
செல்வி க வைகுந்தராணி
திரு. ச. பாலசுப்றமணியம்
திருமதி த. நடராசா

திருமதி மங்கையக்கரசி
திரு. சு. தேவராசா
திரு. க. மகாதேவன்
திரு இ. லோகநாதன்
திரு. த. நந்தகுமாரன்
திரு. ல. இ. ராஜ்குமார்
திரு. அ. மை. இராஜ்குமார்

**பணிப்பாளர்கள்**

திருமதி குணேந்திரன் திருஞானசோதி (தலைவர்) (18—6—98)
வெளிக்கள உத்தியோகத்தர்:- செல்வி வி. தனலக்சுமி (23—7—88)
பொருளாளர்:- க. பரமேஸ்வரி (23—8—89—> 31—3—90)
பொருளாளர்:- திரு. சி. செல்வராசா (1—2—90—> 30—9—90)
செல்வி த. கௌந்தி (காசாளர்) 9-4-90
செல்வி கு. குணவதி (திருமதி கு. சிவராசா) எழுதுவினைஞர் (3-10-90)
செல்வி ஜெ. மதிவதனி (நிர்வாகச் செயலாளர்) 3-10-90
திரு. வி. பாலராசன்

## 1990 ஆம் ஆண்டு

விவசாயத்திட்டம் வெளிக்
திருமதி ச. வித்தியானந்தன்
செல்வன் T. கமலநாதன்
களஞ்சியம்

செல்வி தயாதேவி சின்னத்துரை
செல்வி சுமதி சுவசுப்பிரமணியம்
திட்டப்பொறுப்பாளர்
திருமதி ஆனந்தவேல்

## 1991

திரு. தெய்வேந்திரம் 1991 வெளிக்கழ உத்தியோகத்தர்,
91 வெ. உ. தெரிவு
திரு. தயாளன், செல்வி விஜயானந்தி, செல்வி சிவாஜினி

# கோப்பாய் உதவி அரசாங்க பிரிவிலுள்ள இயங்கிவரும் கழகங்கள்

## இயங்கும் கழகங்கள்

1. நீர்வேலி ஸ்ரீ முருகன்
2. நீர்வேலி வடக்கு முகளீர்
3. நீர்வேலி இலக்குமி
4. உரும்பிராய் கற்பக வினாயகர்
5. இடைக்காடு
6. சிதம்பரேஸ்வரா
7. அச்செழு அம்பாள்
8. தோப்பு கலைவாணி
9. ஆவரங்கால் சிவகாமி
10. ஆவரங்கால் பர்வதவர்த்திணி
11. புத்தூர் வளர்மதி
12. புத்தூர் கௌளரி
13. புத்தூர் குமரகுருபரன்
14. காட்டுமலைக் கந்தன்
15. இருபாலை ஸ்ரீ முருகன்
16. நீர்வேலி பகவதி
17. வளலாய் மேற்கு
18. புத்தூர் தமிழாலயம்
19. நீர்வேலி காமாட்சி
20. நீர்வேலி அரசகேசரி
21. அச்சுநகர்
22. அச்சுவேலி கதிரொலி
23. சிறுப்பிட்டி சுயதொழில்
24. அச்சுவே நாவலர்
25. உரும்பிராய் அம்பாள்
26. உரும்பிராய் சென்மைக்கல்
27. சி. வை தாமோதரம்பிள்ளை
28. சிறுப்பிட்டி ஞானவைரவர்
29. உரும்பிராய் அம்பாள்
30. அச்சுவேலி கலாநிதி
31. பத்தைமேனி இளங்கதிர்
32. நீர்வேலி விநாயகர்
33. உரும்பிராய் இலக்குமி
34. புத்தூர் கலைமத்
35. அச்சுவேலி மத்தி
36. நீர்வேலி மீனாட்ச்சி
37. புத்தூர் குருநாதர்
38. அச்சுவேலி ஸ்ரீ முருகன்
39. ஆவரங்கால் சர்வோதயா
40. கதிரிப்பாய்
41. ஊரெழு
42. அச்சுவேலி கலாஜோதி
43. அச்சுவேலி விக்னேஸ்வரா
44. உரும்பிராய் அன்னுங்கை
45. சிறுப்பிட்டி ஜனசக்தி
46. புத்தூர் அறிவொளி
47. ஆவரங்கால் கலையகம்
48. ஆவரங்கால் லிங்கன்
49. புத்தூர் கலைவாணி
50. ஆவரங்கால் விவேகானந்தா
51. வினோபாஜி
52. ஆவரங்கால் மணற்பகுதி
53. சிறுப்பிட்டி அண்ணா
54. சிறுப்பிட்டி உதயதாரகை
55. உரும்பிராய் திருக்குமரன்
56. உரும்பிராய் செல்வபுரம்
57. அச்செழு மத்தி
58. புத்தூர் மாரியம்மன்
59. பூலசிட்டி வளர்மதி
60. சிறுப்பிட்டி மேற்கு
61. தோப்பு மாரியம்மன்
62. வாதரவர்த்தை விக்னேஸ்வரா
63. தோப்பு அபிராமி
64. தம்பா மகளீர்
65. ஈவினை கலைமகள்

### உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்கள்

1. இணுவில் சிவகாமசுந்தரி
2. ஏழாலை பாரதி
3. ஏழாலை சூறாவத்தை
4. இணுவில் ஸ்ரீ முருகன்
5. மயிலங்கூடல்

### சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்கள்

சித்தங்கேணி கலைவாணி
சுளிபுரம்
மூளாய்

### தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்கள்

தெல்லிப்பளை வடமேற்கு
நித்தியானந்தா
கருகம்பனை இராஜஇராஜேஸ்வரி
கோட்டைக்காடு நாமகள்

### சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபா பிரிவிலுள்ள கழகங்கள்

கட்டுடை
மானிப்பாய் வடக்கு மருதடி
மாசியப்பிட்டி கன்னகை
பண்டத்தரிப்பு சென் அன்ரனீஸ்
வடலியடைப்பு
மானிப்பாய் ஆனந்தா
நவாலி முருகானந்தா
முள்ளி தச்சுத்தொழிலாளர்
பண்டத்தரிப்பு மகளிர்
சண்டிலிப்பாய் ஞானவைரவர்

### யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்கள்

யாழ்ப்பாணம் — றைபிசன்
கொய்யாத்தோட்டம்
கொழும்புத்துறை சந்திரசேகர்
பாஷையூர்

### நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்கள்

நல்லூர் கந்தன்
தாவடி
கொக்குவில் மஞ்சவணப்பதி
கொக்குவில் இராமகிண்ணா
கோண்டாவில்

### வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்கள்

மண்டைதீவு
அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ்
மண்கும்பான்

### சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபா பிரிவிலுள்ள கழகங்கள்

சரசாலை சிவசக்தி
கைதடி விழிப்புணர் அற்றோர்
மட்டுவில் ஐங்கரன்
வேவில் ஸ்ரீ முருகன்

### பருத்துத்துறை, கரவெட்டி உதவி அரசாங்க பிரிவிலுள்ள கழகங்கள்

பருத்துறை
கொற்றையூர்
உடுப்பிட்டி வடக்கு
புலோலி மேற்கு
துன்னாலை தெற்கு
அல்லை முருகன்
பொலிகண்டி கரையோரப் பெண்கள்
கெருடாவில் அம்பிகை



# நன்றி நவிலல்

20 ஆம் நூற்றாண்டிற்கு பிரியாவிடை கொடுத்து 21 ஆம் நூற்றாண்டினை வரவேற்க தயாராகும் இவ்வேளை எம்மன்றத்தின் 10வது ஆண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட அனைத்து வழிகளாலும் உதவி புரிந்த கழக அங்கத்தவர்கள், நிர்வாகத்தினர், விழாக்குழு உறுப்பினர்கள், கட்டுரைகள், விளம்பரங்கள், ஆசிச்செய்தி, வாழ்த்துக்கள் அனைத்தும் தந்து உதவிபுரிந்த அனைவருக்கும் ஆண்டுவிழா மலரினைச் சிறப்பாக பிரசுரித்து ஒத்துழைப்புப் செய்த புனித வளன் கத்தோலிக்க அச்சகத் தினருக்கும் எம் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

**சமூக அபிவிருந்தி மன்றம்**
257/2 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
யாழ்ப்பாணம். 1998.